# விடுதலைப்புலிகள்

குரல்: 69 16-30 ஆனி 1996 அன்பளிப்பு: 5/=


**உள்ளே**


- குடாநாட்டில் அரசாங்கத்தின் சுதாநாயக வேடம்
- கரும்புலிகள்: தேசத்தின் புயல்கள்!
- சமரசப் பேச்சுவார்த்தைகளுக்கு புலிகள் இயக்கம் எதிரா?
- விரைவில் உணர்வாய் பகையே உன் வெற்றியெல்லாம் வெறும் கனவே!
- வஞ்சிக்கப்பட்ட தமிழர்: வாக்குறுதிகளும் சூழ்ச்சிகளும்!
- தனியார்மயமாக்கல்: தடுமாறும் அரசாங்கம்
- பண்டா குடும்பம் போல உலகில் வேறு உண்டோ?


# தமிழர் தாயகக் கோட்பாட்டைச் சிதைக்க தீர்வுப் பொதியின் பின்னணியில் புதிய சதி!

## தமிழினம் அரசியல் விழிப்புணர்வோடு இருக்கவேண்டியது அவசியம்

தமிழரின் தாயகபூமியைத் துண்டாடி – அதன் ஒருமைப்பாட்டைச் சிதைத்து – முடிந்தளவுக்கு அதனைக் கபளீகரம்செய்வது என்பது, சிங்களப் பேரினவாதிகள் ஒருபோதுமே கைவிடமாட்டாத அரசியல் மூலோபாயமாக இருந்துவருகின்றது.

வெற்றிகரமாக அதனைச் சாதிப்பதன்மூலம், தமிழரின் தேசிய தனித்துவத்தையும் அவர்களது தாயகக் கோட்பாட்டையும் உடைத்தெறிந்து –

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் அடிப்படையையே முறியடித்துவிடச் சிங்களப் பேரினவாதிகள் முழுமூச்சுடன் செயற்படுகின்றனர்.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள்மூலமும், குடியேற்றங்களுக்கான நிலப்பரப்பைத் தேர்ந்தெடுப்பதில் கடைப்பிடித்துவரும் சூழ்ச்சிகரத் தந்திரோபாயங்கள்மூலமும் -

கிழக்கு மாகாணத்தைச் சிங்களமயமாக்கிவிட வேண்டும் என்ற வெறியுடன், நீண்ட காலத் திட்டத்துடன், ஓய்வற்ற கடும் முயற்சியைச் சிங்களப் பேரினவாதிகள் செய்துவருகின்றனர்.

அல்லை - கந்தளாய் குடியேற்றத் திட்டத்தின்மூலமாக, கிழக்கு மாகாணத்தின் ஒருபகுதியில், பல்லாயிரம் சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டனர்; தமிழரின் நிலத்தைப் பறிப்பதுடன், மட்டக்களப்பு - திருக்கோணமலை மாவட்டங்களின் நிலத்தொடர்பை அறுத்துவிடும் சதி ஒன்றின் அங்கமாகவும், அந்தக் குடியேற்றத்தைச் சிங்களப் பேரினவாதிகள் செய்தனர்.

இதேபோன்றுதான், வெலி ஓயா குடியேற்றத் திட்டத்தின்மூலம் வடக்கு - கிழக்கின் நிலத்தொடர்பைத் துண்டித்ததுடன், ஒருபகுதி நிலத்தையும் பேரினவாதிகள் அபகரித்துள்ளனர்.

தமிழரின் தாயகபூமியைப் பிரித்து - சிதைத்து -முடிந்தளவுக்கு கபளீகரம் செய்வது என்பது, சிங்களப் பேரினவாதிகளின் அரசியல் மூலோபாயமாகும். இதை வெற்றிகரமாகச் சாதிப்பதன்மூலம், தமிழரின் தேசிய தனித்துவத்தை - தமிழினத்தின் தேசிய பலத்தை - அழிக்க, பேரினவாதிகள் முயற்சிக்கின்றனர்; இதன்மூலம், விடுதலைப் போராட்டத்தின் வீரியத்தையும் சிதைத்து - போராட்டத்தை முறியடிக்க முடியும் என்றும், பேரினவாதிகள் திடமாக நம்பிச் செயற்படுகின்றனர்.

இனப்பிரச்சினைக்கான 'தீர்வுத் திட்டங்கள்' என்ற போர்வையிலும் தமிழரின் தாயகபூமியை சிதைக்கும் 'கைங்கரியத்தில்', ஆட்சியாளர்கள் தீவிர ஈடுபாடு காட்டுகின்றனர்.

'தமிழர் - முஸ்லிம்கள் - சிங்களவர்களுக்கென்று தனித்தனியான நிர்வாக அலகுகள்' என்ற மூடுதிரைக்குள், கிழக்கை மூன்று துண்டுகளாகப் பிரித்துவிடும் ஒரு நாசகாரத் திட்டத்தை - ஜே. ஆரின் ஆட்சிக்காலத்திலிருந்து இன்றுவரை - நடைமுறைப்படுத்தச் சிங்கள ஆட்சியாளர்கள் துடிக்கின்றனர்.

சந்திரிகா அம்மையாரின் அரசாங்கம் வெளியிட்ட 'தீர்வுப்பொதி'யின் சட்டவரைவில், தமிழரின் தாயகபூமி பற்றியோ அல்லது அந்த நிலத்தின் நிர்வாக அலகுகள் பற்றியோ எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பது, இங்கே குறிப்பிடத்தக்கது. கிழக்கைத் துண்டாடும் சூழ்ச்சியினாலேயே, 'சிங்கள மக்களைத்திருப்திப்படுத்த','பேரினவாத சக்திகளைச் சாந்தப்படுத்த'- என்று கூறிக்கொண்டு, சந்திரிகா அரசாங்கம் அவ்விதம் செய்தது.

தமிழர் - முஸ்லிம் பிரிவினையை ஏற்படுத்தியும், கூட்டணி உட்பட தமிழ்க் குழுக்களுக்கு ஆசைகாட்டியும் மிரட்டியும் கிழக்கைத் துண்டாடிவிட, அம்மையார் தீவிர முயற்சிகளை எடுத்துவருகின்றார்.

இந்த சதித்திட்டத்தை அரங்கேற்ற இப்போது, ஒரு புதிய முயற்சியைச் சிங்களப் பேரினவாதிகள் ஆரம்பித்துள்ளனர்.

கிழக்கைத் தனிமாகாணம் ஆக்க வேண்டும் என்ற கோஷத்தை, கூட்டணியின் பிரதிநிதிகள் சிலரைக் கொண்டும் முஸ்லிம் கொங்கிரஸைக் கொண்டும் எழுப்புவிக்க, அவர்கள் முயற்சிக்கின்றனர்.

கிழக்கு தனித்திருந்தால் அது விரைவாக அபிவிருத்தி காணமுடியும் என்ற நச்சுவிதையை, பேரினவாதப் புத்திஜீவிகள் விதைத்து வருகின்றனர். இதேவேளை, படையினருடன் இணைந்து செயற்படும் தமிழக் குழுக்களில் சில, வடக்கு விரோதக் கருத்தை, கிழக்குவாழ் மக்கள் மத்தியில் பரப்ப முயற்சிகள் செய்து வருகின்றன.

'தனி மாகாணம்' என்ற பெயருடன் கிழக்கை வடக்கிலிருந்து பிரித்தெடுத்து - பின்னர் அதைப் பலவேறு துண்டுகளாகப் பிரித்து - தமிழரின் தாயகக் கோட்பாட்டை சுலபமாக முறியடித்துவிட முடியும் என, பேரினவாதிகள் நம்புகின்றனர்; அதைச் சாதிப்பதற்காக, தம்மால் இயன்ற அனைத்து வழிகளையும் அவர்கள் உபயோகிக்கின்றனர்.

இந்த சூழ்ச்சிகர சதிகளை, எச்சரிக்கை உணர்வுடனும் அரசியல் விழிப்புணர்வுடனும் இருந்து முறியடிக்கவேண்டிய கடமைப்பாடு, தமிழீழ மக்களிற்கு உள்ளது!

## கரும்புலிகள் நாள் 1996

காலத்தால் செதுக்கப்பட்ட
சிலைகளல்ல - இவர்கள்
ஒரு காலத்தைச் செதுக்கிய
சிற்பிகள்!

காற்றுக்கும் திசையினைக்
கற்றுக் கொடுப்பவர்கள்
கனவுகள் இவர்களுக்கில்லை;
இவர்களே எதிரியின் கனவுகள்!

சூரியன் வந்து சுடுவதில்லை.
வெப்பம் இவர்கள்
விழிகளின் உருவாக்கம்!

எதிரியின் எல்லைகள்
இவர்களின்
விளையாட்டுத் திடல்கள்!

மரணம் இவர்களை
தொடுவதற் கஞ்சும்.
கால்களில் விழுந்து
மண்டியிடும்.

கரங்களில் கிடப்பது
துப்பாக்கிகள் அல்ல;
வரலாற்றின் செம்புகோல்கள்!

- விவேக




தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

Liberation Tigers Of TAMIL EELAM

புலிகளின் குரல்

# சிங்களப் பேரினவாதத்தின் கதாநாயக வேடம்!

குடாநாட்டில் இன்று நடைமுறையிலுள்ள இராணுவ ஆட்சியை வலுப்படுத்தும் நோக்குடன், அரசாங்கமும் அரசுப் படைகளும், நுட்பமான வகையில் சில காரியங்களை – அங்கே – செய்ய முனைகின்றன.

கடந்த பல வருடங்களாக குடாநாட்டு மக்கள் மீது, சிங்கள அரசு திணித்த அடக்குமுறைகள் – தடைகள் என்பவற்றில் சிலவற்றை அது தளர்த்தி உள்ளது; அத்துடன், மக்களைத் தம்பக்கம் ஈர்க்கும் தந்திரோபாயத்துடன், சில அணுகுமுறை மாற்றங்களையும் அங்கே வலிந்து புகுத்திவருகின்றது.

மக்கள் எதிர்ப்பு இல்லாமல் தனது இராணுவ ஆட்சியைத் தொடரும் தந்திரத்திற்காகவும், புலிகள் இயக்கத்திற்கு எதிராக மக்களைத் திருப்பிவிடலாம் என்ற ஒரு நம்பிக்கையிலும், இந்த அணுகுமுறை மாற்றங்களை அரசு பிரயோகிக்க முற்படுகின்றது.

குடாநாடு மீது அரசாங்கம் விதித்த பொருளாதாரத் தடைகளை நீக்கும்படி, மக்கள் எத்தனையோ ஆர்ப்பாட்டங்களை நடாத்தி, அரசாங்கத்திடம் மகஜர்களையும் கையளித்திருந்தனர்; அவை எதற்கும் அரசு செவிசாய்க்கவில்லை. அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைக் காலத்தில், புலிகள் இயக்கமும் அதே விடயங்களையே வலியுறுத்தி – அவற்றை நிறைவேற்றிவைக்கும்படி கோரியிருந்தது. அதையும் அரசாங்கம் அசட்டை செய்தது. ஆனால் இப்போது, தான் விதித்த தடைகளில் சிலவற்றைத் தானே நீக்கிவிட்டுள்ளது.

இது எதைக் காட்டுகின்றது?

தனது இராணுவ ஆட்சியை ஸ்திரப்படுத்துவதற்கும், 'அவர்களது கட்டுப்பாட்டின் கீழ் இருந்தால்தான் ஏதாவது தருவார்கள்' என்ற 'வளர்ப்புநாயின் மனநிலையை' குடாநாட்டு மக்களுக்கு ஊட்டுவதற்கும் அரசு முயற்சிசெய்கின்றது என்பதையே, அது காட்டுகின்றது.

அரசின் இந்த அணுகுமுறை மாற்றங்களின் பின்னாலுள்ள சூழ்ச்சிகர அரசியலைப் புரிந்துகொள்ளாத சிலர், "இராணுவத்தினர் நல்லவர்களாகத் திருந்திவிட்டனர்" என்று எண்ணத் தலைப்படுகின்றனர்.

குடாநாட்டிற்குள் இருந்த படைமுகாங்களில் இருந்தும வானில் இருந்தும, குடாநாட்டு மக்கள் மீது - கண்மூடித்தனமான வகையில் – குண்டுகளை வீசிய அதே படையினர் இன்று, எதற்காக "கதாநாயகன்" வேடம் போடுகின்றனர் என்று எண்ணிப் பார்க்கவேண்டும்.

இதேவேளை, இன்றும் வன்னிவாழ் மக்கள் மீதும் கிழக்குவாழ் தமிழர்கள் மீதும், எறிகணைகளையும் வான் தாக்குதல்களையும் எதற்காக நடாத்துகின்றனர் என்றும் கேள்விகளை எழுப்பி - விடை தேட முயல்வதே, உண்மை நிலவரத்தை உணர்ந்துகொள்வதற்கான சரியான வழியாகும்.

சுதந்திரத்தை இழந்த நிலையில்–சிங்களப் படையின் காலடிக்குள் – குடாநாட்டு மக்கள் உள்ளனர் என்பதே, குடாநாட்டின் இன்றைய யதார்த்தமாகும்.

வழிநெடுகச் சோதனைச் சாவடிகளை அமைத்து, இரவில் மக்களை நடமாடவிடாது கட்டுப்படுத்தி, நினைத்த நேரத்தில் நினைத்த இடங்களைச் சுற்றிவளைத்து மக்களைக் கைதுசெய்து தனது இராணுவ அதிகாரத்தை அன்றாடம் வெளிப்படுத்தியபடி, சிங்களப் படை குடாநாட்டில் நிலைகொண்டுள்ளது.

தமிழரின் இரத்தத்தில் குளித்த அந்த அந்நிய இராணுவம் – ஒரு நோக்கத்திற்காக இன்முகம் காட்டி, மக்களுடன் உறவாடலாம்; ஆனால், அது எமது மக்களைப் பாதுகாக்கும் என்றோ அல்லது சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க அனுமதிக்கும் என்றோ எண்ணுவது, ஒரு பகற்கனவாகும்; அத்துடன், ஆபத்து நிறைந்ததும் ஆகும்.

சுதந்திரத்திற்கான போராட்டத்தில் தொலைதூரம் வந்துவிட்ட எமது மக்களை, மீண்டும் ஆரம்ப இடத்திற்கு இழுத்துச் செல்ல, எதிரி கங்கணம் கட்டியுள்ளான்; குடாநாட்டு ஆக்கிரமிப்பை அதற்குரிய நல்லதொரு ஆரம்பமாகப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளான்.

'குடாநாட்டை புனரமைப்பேன் – அதை அபிவிருத்தி செய்வேன் – அங்கே கல்வியை ஊக்குவிப்பேன் – வேலைவாய்ப்புகளை வழங்குவேன்' என்று, 'பசு வேடம் பூண்டு' சிங்களப் பேரினவாத பூதம் பிரச்சாரம் செய்கின்றது!

ஆனால், கடந்த 5 வருட காலமாக கிழக்கு மாகாணத்தின் பெரும்பகுதி, சிங்களப் படைகளின் ஆக்கிரமிப்புக்குள்ளேயே இருந்தது; அங்கு எந்த ஒரு அபிவிருத்தியும் செய்யப்படவில்லை என்ற உண்மையை, இந்த இடத்தில் குறிப்பிட வேண்டியுள்ளது.

ஏழை எளிய மக்களுக்கு உதவவென சந்திரிகா அரசாங்கம் உருவாக்கிய 'சமுர்த்தி திட்டம்' கிழக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால், தமிழ் மக்களைப் புறக்கணித்துவிட்டு, அங்கே வாழும் சிங்கள - முஸ்லிம் மக்களுக்கே அரசு உதவிகள் வழங்கப்பட்டன என்ற உண்மையையும் – அரசின் உண்மை முகத்தைக் காட்ட – இங்கே சுட்டிக்காட்டுகின்றோம்.

தமிழ் மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற கொள்கை, சிங்கள அரசிடம் இருந்தது இல்லை; இதை நிரூபிக்க, கடந்த 40 வருட வரலாற்றை ஆதாரமாகக் காட்டமுடியும்.

ஆனால், இப்போது திடீரென, குடாநாட்டு மக்களுக்கு நல்லது செய்யப்போவதாக அரசாங்கம் அறிவித்திருப்பதுடன், இராணுவம் தனது அணுகுமுறையிலும் ஒரு மாற்றத்தைச் செய்திருப்பதன் உள்நோக்கம் எதுவென, எமது மக்கள் இனங்காணவேண்டும்.

தமிழரின் விடுதலைப் போராட்டத்தை அழித்தொழிப்பது என்பது, சிங்கள அரசின் இலட்சியமாகும்; அதைச் சாதிக்க இப்போது, நுட்பமான அரசியற் செயற்பாடுகளையும் தந்திரோபாயங்கள் நிறைந்த அணுகுமுறைகளையும் சந்திரிகா அரசாங்கம் கடைப்பிடித்துவருகின்றது. தேவையான இடங்களில் கதாநாயகன் வேடத்திலும், மற்றைய இடங்களில், தனது சொந்தக் குணத்திற்குரிய வில்லன் வேலைகளிலும் சிங்கள அரசாங்கமும் அதன் படைகளும் ஈடுபடுகின்றன.

சிங்களப் பேரினவாதத்தின் இத்தகைய நவீன திட்டங்களுக்கும் அணுகுமுறைகளுக்கும் எமது மக்கள் பலியாகிவிடக்கூடாது. எதிரியின் இதுபோன்ற நாசகார முயற்சிகளை விழிப்புணர்வுடன் இருந்து முறியடிக்கவேண்டிய வரலாற்றுக் கடமை, குடாநாட்டில் வாழும் மக்களிற்கு உள்ளது! O

# நுணுக்குக்காட்டி

"வடக்கிலிருந்து தென்பகுதிக்கு வரும் பயணிகள் வவுனியாவில் நடத்தப்படும் முறை, இது இரண்டு நாடுகளைக்கொண்ட ஒரு தீவா என்ற சந்தேகத்தை இயற்கையாகவே ஏற்படுத்துகின்றது. யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு நாடுகளின் எல்லைப்புறத்தில் கடைப்பிடிக்கப்படுவது போன்ற நடைமுறையே வவுனியாவில் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படுகின்றது."

– ஆசிரியர் தலையங்கம்
'வீரகேசரி' - 15. 05. 1996

"இலங்கை இராணுவத்தினர் யாழைக் கைப்பற்றியமை நன்மையான விடயமல்ல. கைப்பற்றுவதால் நாடு இரண்டுபடும் நிலை ஏற்படலாம. யார் என்ன கூறினாலும், யுத்தத்தின் விளைவு திருமணம் அல்ல, விவாகரத்தே ஆகும். குண்டு விழும்போது அப்பிரதேசத்தில் வாழும் மக்கள் மனதில் நம்பிக்கையீனமும் வஞ்சமும் தான் ஏற்படுகின்றன. இராணுவ நிர்வாகத்தினால் இவ்விளைவுதான் ஏற்படும்."

– அஜித் ரூபசிங்க
'சரிநிகர்' - ஜூன் 13 – ஜூன் 26, 1996.

"இலங்கை இராணுவம் கனரக ஆயுதங்களுடனும் விமானங்களுடனும் சென்று யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி இருக்கின்றது. இப்பொழுது அங்கு புனருத்தாரண வேலைகள் 'ஓகோ' என்று நடைபெறுவதாகப் புளுகப்படுகிறது. ஆனால், ஒன்றுமட்டும் உண்மை. திருவிழாக் கடையிலே பெற்றோரை மறந்து, பிள்ளை பூக்கடையையும் பொம்மைக் கடையையும் பார்த்து மகிழ்ச்சியடையும், இன்பத்தின் எல்லைக்குக்கூடச் செல்லும்.

ஆனால், சிறிது பொழுதின் பின்பு பெற்றோரைக் காணவில்லை என்று பிள்ளை உணர்கின்றபொழுது பூவும் வேண்டாம், பொமமையும் வேண்டாம்; அம்மா வேண்டும், அப்பா வேண்டும் என்று அந்தப் பிள்ளை அழும் - அடம்பிடிக்கும். அகிலத்தையே கொண்டு குவித்தாலுங்கூட அது அமைதியடையப்போவதில்லை. யாழ்ப்பாண மக்களிடம் அரசு அடையப்போகின்ற அனுபவம் இதுதான். 'அம்மா வேண்டும், அப்பா வேண்டும்' என்பதுபோல், 'அதிகாரம் வேண்டும்', 'சுதந்திரம் வேண்டும்' என்று மக்கள் குரல் எழுப்பத்தான் போகின்றார்கள். அப்போது, இந்திய அமைதிப்படை ஆக்கிரமிப்புப் படையாக மாறியதற்குக் கிஞ்சித்தும் சளைக்காமல், 'சூரியக்கதிர்' மக்களைச் சுட்டுப் பொசுக்கத்தான் போகிறது."

– கே. துரைராஜசிங்கம் நா. உ.
'வீரகேசரி' - 24. 06. 1996

"... எங்களுடைய பிள்ளைகளின் பெயர்களை அவர்கள் (குடாநாட்டு இராணுவம்), வீதிகளின் முகப்பிலிருந்தும் எடுத்தெறிந்துவிட்டார்கள்; எங்கள் பிள்ளைகளின் முகங்களை எங்களின் மதில்கள், சுவர்களிலிருந்து அவர்கள் துடைத்தெடுத்துவிட்டார்கள்; சந்திகள், திருப்பங்களிலிருந்த எங்கள் பிள்ளைகளின் நினைவுச் சின்னங்களை அவர்கள் உடைத்து நொருக்கிவிட்டார்கள்; எங்கள் பிள்ளைகளின் துயிலும் இல்லத்தை அவர்கள், கவச வண்டிகளால் உழுது மூடிவிட்டார்கள். எங்கள் பிள்ளைகளின் கல்லறைகளைக்கூட விட்டுவைக்காத ஒரு கொடுங்கோல் ஆட்சிதான் இப்போது, எங்கள் வீதிகளைத் திருத்தப்போவதாகவும் வீடுகளைச் செப்பனிடப்போவதாகவும் கூறுகிறது."

– தேசபக்தர்கள்
('புனர்நிர்மாணப் பொறி' என்ற துண்டுப் பிரசுரத்தில்)
'ஈழநாதம்' - 30. 06. 1996

# தேசத்தின் புயல்கள்



ஏற்கெனவே எல்லா வழிகளிலும்
அவர்களைச் சொல்லியாகிவிட்டது.

பாடல்கள் இசைத்து,
கட்டுரைகள் யாத்து, கவிதைகள்
படைத்து, ஓவியங்கள் தீட்டி, உரைகள்
முழக்கி, படங்களாய்க் காட்டி -

எப்படியெப்படி முடியுமோ
அப்படியெல்லாம்; எவரெவரால்
முடியுமோ அவர்களாலெல்லாம் -

ஏற்கெனவே எல்லா வழிகளிலும்
அவர்களைச் சொல்லியாகிவிட்டது.
ஆனாலும் ஈற்றில் தம்முயற்சியில்
எவராலும் வெல்ல முடிந்ததா...?
இதுவரை இல்லை !

நாம் என்ன செய்தோம்?;
பார்த்துணர முடிந்த, கேட்டுணர முடிந்த,
தொட்டுணர முடிந்த அவர்களது
வெளித்தோற்றப்பாட்டை
அடிப்படையாகக்கொண்டு, எம் சிந்தனா
சக்தியினால் கணிப்பீடு செய்ய முடிந்த
அவர்களது உள்ளுணர்வுகளுக்கு மட்டுமே,
நாம் கலைகளில் வடிவமிட்டோம்.
இவற்றைக் கடந்து சென்று -

தேசபக்தியினதும், இனப்பற்றினதும்,
சமூகநேசத்தினதும் உச்ச
உயர் பீடங்களில் வீற்றிருந்த அவர்களது
ஆத்மாக்களின் ஆழமான
பரிமாணங்களை, எம்மில் எவரால்
கண்டறிந்து வெளிப்படுத்த முடிந்தது ...?
இதுவரையும் இல்லை; இனிமேலும்
இல்லை !

உரிமை கோரியும், உரிமை
கோராமலும் நிகழ்த்தப்பட்ட கரும்புலி
நடவடிக்கைகள் எம் போராட்டத்தில்
ஏற்படுத்திய தாக்கமிகு விளைவுகளின்
அரசியல், இராஜதந்திர,
இராணுவப்பரிமாணங்களைக்கணிப்பிட்டு
ஆய்வு செய்ய முடிந்த எம்மால், . அந்த
ஒப்பற்ற சாதனைகளின்
சொந்தக்காரர்களது மனவுணர்வுகளின்
ஆழத்தையும், அகலத்தையும்
அளவெடுக்க முடிந்ததா...? இல்லை !

உண்மையிலேயே, வார்த்தைகளால்
வரம்பு கட்டிடும் வரையறைகளுக்கு
அப்பாலே இன்னமும் வாழுகின்ற,
சாகாவரம் பெற்ற சிரஞ்சீவிகளாய்
எம் நினைவுகளை என்றும்
நிறைத்திருக்கும் அவர்கள், சொற்களின்
சோடனைகளால் அலங்கரிக்க முடியாத
அற்புதங்களேதான் !

எண்ணுகின்ற போதெல்லாம் நெஞ்சு
விம்முகின்றது ! அந்தப் புரியாத
புதிர்களால் வியக்கின்றது !

நிலமதிர உயிரழிந்தும், கடலதிர
உருசுகுலைந்தும், தமிழனின் சுதந்திர
வேட்கையை உலகதிர முரசறைந்த
அவர்கள், தமிழீழ தேசத்தின் நெருப்பு
மனிதர்கள் !

தமிழனைக் கொன்றவர்களைக்
கொன்று, தமிழனை எரித்தவர்களை
எரித்து, தான் அழியும் கடைசி
நொடியிலும் தமிழின் பகையழிக்கும்
குறிக்கோளில் குலையாத இலட்சிய
வேங்கைகள் !

பலவீனப்பட்ட எம் இனத்தின்
பலமெனத் தோற்றம்கொண்டு,
'அம்பாகவும் வில்லாகவும்' எம்மை
அழித்தவர்களையெல்லாம் அழித்து,
பழிக்குப்பழியெடுத்த கர்மவீரர்கள் !

சுயத்தின் பற்றுக்களைத் துறந்து,
ஆசையின் வேர்களைப் பிடுங்கி,
தனிப்பட்ட வாழ்வின் இலட்சியங்களைக்
களைந்து, இனத்தின் விடிவு ஒன்றையே
அவாவிய ஈகத்தின் உன்னதங்கள் !

வாழ்வில் விருப்பிருந்தும், சாவில்
வெறுப்பிருந்தும், தாய்த்திரு நாட்டிற்கு
கடமையென வந்தபோது, நாங்களும்
நாடும் இன்புற்றிருக்கவென தம்மையே
இல்லாதழித்த தெய்வீகப் பிறவிகள் !

வெளித்தெரிந்தும்
வெளித்தெரியாமலும்;
முகம் காட்டியும்
முகம் காட்டாமலும் - பக்கத்திலும்
எட்டத்திலுமாகக் கண்மூடிப்போன
வாழ்வின் வழிகாட்டிகள் !

முகம் மறைத்து, தாம் புரிந்த
அரும்பெருஞ் செயல் மறைத்து,
பெயர் மறைத்து, தாம் பெறும்
மாபெரும் புகழ் மறைத்து, இனத்தின்
நலன் ஒன்றையே இலட்சியமாய் வரித்து,
நிஜத்தில் படைத்த சாதனைகளின்
பின்னால் நிழல்களாய்த் தூங்கும்
சரித்திரங்கள் !

அடிபட்டு அடிபட்டு, நலிவுற்று
அழிவுற்று, அழுது புலம்பிக் கிடந்த
தமிழினத்திற்காக - உலகின்
ஈடு இணையற்ற வீரப்படையணியென -
மாபெரும் தலைவன் பிரபாகரன்
தோற்றுவித்த மனிதக் கணைகள் !

நீண்ட உலக வரலாற்றில்
முதற்தடவையாக, உயிர் கொடுத்துப்
பகையழிக்கும் 'தற்கொடைப்படை'யெனத்
திரண்டு, இனத்திற்குப் பெருமை தந்த
எம் "தேசத்தின் புயல்கள் !"

தமிழீழத் தனியரசை நிறுவி,
அவர்களது திருப்பாதங்களின்மீது
காணிக்கையாக்குவதைத் தவிர -
அன்னவர்களுக்குச் செலுத்தக்கூடிய
அஞ்சலி வேறென்ன
இருக்கப்போகின்றது !
எதுவுமே இல்லைதான் -
சுதந்திரத்தைத் தவிர !

- தி. இனியவன்



# சமரசப் பேச்சுவார்த்தைகளுக்கு புலிகள் இயக்கம் எதிரா?




*தமிழீழ விடுதலைப் போராட்டம் சந்தித்துள்ள இன்றைய நெருக்கடியான வரலாற்றுச் சூழலில், விடுதலைப் புலிகள் இயக்கம், அரசாங்கத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தையினை ஆரம்பித்தாலென்ன என்ற கேள்வி, எம் மக்கள் சிலரிடையே எழப் பார்க்கிறது. இது தொடர்பான ஒரு விளக்கம் இங்கே தரப்படுகின்றது.*

“பேச்சுவார்த்தைகள்மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் புலிகள் இயக்கத்திற்கு நாட்டம் இல்லை; அதனால் புலிகளுடன் பேச்சு நடாத்துவது பயனற்றது'' என்பது சிங்கள தேசத்தினது - பொதுவான - குற்றச்சாட்டு.

பிரேமதாசா அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையைப் புலிகள் குழப்பினர்; அதுபோல, சந்திரிகா அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையையும் புலிகள் தான் குழப்பினர் என்று கூறி, தமது குற்றச்சாட்டிற்கு அவர்கள் நியாயம் சேர்க்கின்றனர்.

ஆகவே, பேச்சுவார்த்தை மூலம் தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமாயின், அதற்குத் தடையாக உள்ள புலிகள் இயக்கத்தை முதலில் அழிக்கவேண்டும் என்று, சிங்கள அரசு கூறுகின்றது.

இந்த இனப்பிரச்சினையை புலிகள் இயக்கமே ஆரம்பித்துவைத்தது என்றால், அரசின் மேற்குறித்த குற்றச்சாட்டை ஒரு விவாதத்திற்கு எடுத்து ஆராயலாம்.

ஆனால், புலிகள் இயக்கம் தோன்ற முன்னரே - இன்னும் அழுத்திச் சொன்னால், தலைவர் பிரபாகரன் பிறக்க முன்னரே - தமிழரின் உரிமைப் போராட்டம் ஆரம்பித்துவிட்டது!

அதுவும், பேச்சுவார்த்தைகளை அடிநாதமாகக்கொண்ட சாத்வீக வழிமுறைகளில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண, முன்னைய தமிழ்த் தலைமைகள் - இடைவிடாது - முயன்றன.

## புலிகள் இயக்கத்தைத் தவிர்த்து விட்டு ஒரு தீர்வுத்திட்டத்தை அமுல் படுத்துவதற்கு, அரசாங்கம் துடி யாய்த் துடிப்பது ஏன்?

ஆயினும், என்ன நடந்தது?

தமிழரின் இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டதா?

தமிழர் தலைமைகள், பேசிப் பேசி - மீண்டும் பேசி, தொடர்ந்தும் பேசிக்கொண்டே இருந்ததுதான் மிச்சம்!

அதற்குப் பதிலாகச் சிங்கள ஆட்சியாளர்கள் பேசிக்குழப்பி - மீண்டும் குழப்பி - தொடர்ந்தும் குழப்பிக்கொண்டல்லவா இருந்தார்கள்!

இலங்கை ''சுதந்திரம்'' அடைந்த 1948 ஆம் ஆண்டிலிருந்து ஆயுதப்போர் வலுவடைந்த 1983வரை, சிங்கள ஆட்சியாளர்கள் இனப்பிரச்சினைபற்றி விடாது பேசினர்.

25 வருடங்களுக்கு மேல் எத்தனையோ பேச்சுவார்த்தைகளை நடாத்தி, தமிழினத்திற்கு என்னத்தைக் கொடுத்தார்கள்?

கொடுத்திருக்கத் தேவையில்லை; எடுக்காது விட்டிருக்கலாமே!

ஒவ்வொரு பேச்சுவார்த்தையின்போதும் செய்யப்பட்ட உடன்படிக்கைகளை பின்னர் கிழித்தெறிந்தார்கள் என்ற வரலாற்று உண்மை ஒருபுறம் இருக்கட்டும்; ஆனால், ஒவ்வொரு பேச்சுவார்த்தைக்கும் பின்னர், எம்மிடம் இருந்ததையும் ஒவ்வொன்றாக எடுத்தார்களே!

★ மலையகம்வாழ் தமிழர்களை அரசியல் அநாதைகள் ஆக்கினர் (1948).

★ தமிழ் மொழியைப் புறந்தள்ளினர் (1956).

★ தமிழர் கல்வியை - வேலைவாய்ப்பை - தடுத்தார்கள் (1956, 1971).

★ தமிழ் இனத்தைக் கருத்தில் எடுக்காது, இலங்கையை, சிங்கள - பௌத்த தீவாக்கினார்கள் (1972).

★ பிரித்தானியர்கள் உருவாக்கிய அரசியல் அமைப்பில் சிறுபான்மை மக்களுக்கு இருந்த ஒரு சிறு சட்டப் பாதுகாப்பையும் நீக்கினார்கள் (1972).

★ தமிழரின் தேசிய தனித்துவத்தைச் சிதைக்க - தமிழர் நிலத்தில் - சிங்களக் குடியேற்றங்களை அமைத்சனர் (1948 இலிருந்து தொடர்ச்சியாக).

★ தமிழரின் தாயகத்தை - வடக்கென்றும் கிழக்கென்றும் - பிரிக்க பல்வேறு சதிகளைச் செய்தனர் (1984 - 85).

★ காலத்திற்குக் காலம் இனவன்முறையைத் தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டனர் (56, 58, 61, 77, 81, 83...).

★ சிங்கள ஆயுதப்படைகளை அப்பாவித் தமிழர்கள்மீது ஏவிவிட்டனர்.

இவ்வளவு அடக்குமுறைகளுக்குப் பின்னரும், பேச்சுவார்த்தைமூலம் எமது உரிமைகளைப் பெறமுடியும் என்று நம்ப, தமிழினம் மூடர்களாக இருக்கவில்லை.

ஆயுதம் தூக்கிப் போராடி உரிமைகளைப் பெறும் வரலாற்று நிர்ப்பந்தம், தமிழினத்திற்கு உருவாகியது.

பிரபாகரன் என்ற பெருந்தலைவன் ஆயுதப் போராட்டத்தின் தலைமையைப் பொறுப்பெடுத்தார்.

சிங்கள ஆட்சியாளர்களால் ஏமாற்றப்பட்ட ஒரு வரலாற்று அனுபவத்தையும், போர்க்குணங்கொண்ட தமிழீழ தேசியத்தை மையவிசையாகவும் கொண்ட புலிப்படை, ஆயுதப்போரை அரசு இயந்திரத்தின்மீது தொடுத்தது; தமிழினத்தின் இராணுவ பலத்தை அது, படிப்படியாக வளர்த்து எடுத்தது.

புலிகள் இயக்கத்தின் இராணுவ வளர்ச்சி, தமிழினத்தின் அரசியல் உரிமைகளைப் பேரம் பேசிப் பெறும் பலத்தைத் தமிழினத்திற்கு வழங்கியது.

மக்கள் ஆதரவு - படைத்திறன் என்ற பலத்தை அடிப்படையாகக்கொண்டு, இனப்பிரச்சினைத் தீர்வுககான பேச்சுவார்த்தையை புலிகள் ஆரம்பித்தனர்.

இது, 25 வருடகாலமாக தொடர்ந்து நடந்த முன்னைய பேச்சுவார்த்தைகளை விட முற்றிலும் மாறானது.

'' ஸ்வாமி, கருணைகூர்ந்து ஏதாவது தரவேண்டும்'' என்பது, முன்னைய பேச்சுவார்த்தைகளின் போது தமிழினத்திற்கு இருந்த நிலை.

'' இதைத் தரவேண்டும்; இவ்வளவு நாட்களுக்குள் அதைத் தரவேண்டும்'' என்பது, புலிகள் கால பேச்சுவார்த்தை.

இது கடும்போக்குடைய ஒரு அதிதீவிர நிலைப்பாடு அல்ல. மக்கள் பலம் மற்றும் கசப்பான வரலாற்று அனுபவங்கள் சேர்ந்த ஒரு உறுதி இது. பேசிப்பேசிப் 'பேய்க்காட்டும்' ஒரு வரலாற்று நடைமுறைக்கு எதிரான - தவிர்க்கமுடியாத - ஒரு கடும் நிலைப்பாடு இது.

## சந்திரிகா அரசாங்கத்துடன் பேச்சுக்களைத் தொடர்ந்திருந்தாலும், யாழ்ப்பாணப் படையெடுப்பு நடந்துதானிருக்கும்!

எனவேதான்,

பேச்சுவார்த்தைகளை பயனற்ற வகையில் -

வேறு நோக்கங்கள் கருதி - கொண்டுசெல்ல அரசு முனையும்போது, பேச்சுவார்த்தையிலிருந்து விலகிவிட, புலிகள் தீர்மானிக்கின்றனர்.

கடந்த 40 வருடகாலமாக நடந்துவருவதுபோல - பேச்சுவார்த்தை என்ற மகுடத்துடன் விழலுக்கு நீர் பாய்ச்சி - காலத்தையும் சக்தியையும் வீணாக்க, புலிகள் இயக்கம் தயாராக இல்லை.

இத்தகைய நிலைமைகள் ஏற்படும்போது, புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொள்கின்றது.

இவ்வாறுதான், பிரேமதாசா அரசாங்கத்துடனான பேச்சும் சந்திரிகா அரசாங்கத்துடனான பேச்சும் முடித்துவைக்கப்பட்டன.

பேச்சுவார்த்தையை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தாது பிரேமதாசா அரசாங்கம் இழுத்தடித்துக்கொண்டு இருந்த வேளையிலும் -

தரப்பட்ட உறுதிமொழிகளை நிறைவேற்றாது, சந்திரிகா அரசாங்கம் தனது படையினரைப் போருக்குத் தயார்ப்படுத்திக்கொண்டிருந்த வேளையிலும் -

புலிகள் பேச்சை முடித்துக்கொண்டு வெளியேறினர்.

புலிகள், பேச்சுவார்த்தையை முறித்துக்கொண்டு அல்லது குழப்பிக்கொண்டு வெளியேறுகின்றனர் என்று இதற்குப் பெயர் சூட்டுவது, தமிழ் இனத்தின் 40 வருட வரலாற்று அனுபவத்தைப் பழிப்பதற்கு ஒப்பானதாகும்; அத்துடன், சிங்களப் பேரினவாதத்தின் சூழ்ச்சிகர அரசியலுக்கு துணைபோவதற்கும் அல்லது வக்காலத்து வாங்குவதற்கும் அது சமனானதாகும்.

பேச்சை முடித்துக்கொள்வது என்பதன் அர்த்தம், இனிமேல் புலிகள் இயக்கம் பேச்சுக்குத் தயாரில்லை என்பதோ அல்லது பேச்சுவார்த்தைகளுக்கு புலிகள் இயக்கம் எதிரானது என்பதோ அல்ல.

மாறாக, அரசியல் யதார்த்தங்களை உணர்ந்துகொண்டு - நேர்மையுடன் - பயனுள்ள வகையில்

(7 ஆம் பக்கம் பார்க்க)

# விரைவில் உணர்வாய் பகையே! - உன் வெற்றியெல்லாம் வெறும் கனவே!

உலைக்களம்

- வியாசன்

"தலைகள் குனியும் நிலையில் இங்கே
புலிகள் இல்லையடா - யாரும்
விலைகள் பேசும் நிலையில் எங்கள்
தலைவன் இல்லையடா."

புயலோடு இடிசேர்ந்து மழைபொழியும் நேரம்
குடைவிரிக்கும் எண்ணம் எமக்கில்லை.
மயிலாசனத்திலமர்ந்து
அகிற்புகையில் தலையுலர்த்தும் ஆசையும் எமக்கில்லை.
எம்மக்களுக்காகவும்,
எமது மண்ணுக்காகவும்
பாரச்சிலுவை சுமக்க வேகமெடுத்த எமக்கு
கொலுமண்டபம்,
வெண்கொற்றக்குடை,
திறைசேரித் திறப்பு,
அந்தப்புரம் என்று
எந்தச் சபலமும் இல்லை.
மூச்சுப்பிரியும் நொடிவரை முன்னேறுவோம்.
தடையேதும் இடைவந்து தடுக்கமுடியாது.
அருச்சுனனுக்குத் தெரிந்த மச்சயந்திரமாய்
தமிழீழமொன்றே விழிகளுக்குத் தெரிகிறது.
உயிர் பெரிதுதான் ஒத்துக் கொள்கின்றோம்.
அதனிலும் பெரிது சுதந்திரம்.
இழிநிலை சுமக்கும் தமிழர்களாக இருப்பதிலும்
பழிதுடைக்க எழுவதே பெருவாழ்வு.
பழிதுடைக்க எழுந்து களமாடி மடிந்து
குழியிலுறங்குவது குபேர வாழ்வு.
மாயமானுக்கு ஆசையுறும் மயக்கமேதும் எமக்கில்லை.
ஐந்து ஊர் கேட்டு,
ஐந்து வீடு கேட்டு,
அதுவும் இல்லையென்றான பின்னர் போர் கேட்டு
தூதுவிட எங்களிடம் "கண்ணபரமாத்மா"வும் இல்லை;
நாங்கள் பாண்டவரும் இல்லை.
தர்மத்துக்குச் சமரசங்கள் இல்லை;
அதர்மத்துக்கு நீதி நியாயங்கள் இல்லை.
பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வென்றால்
முதலிற் கைநீட்டுவது புலிகள்தான்.
போரின் மூலமே பிரச்சினைக்குத் தீர்வென்றால்
பிரபாகரன் அதற்கும் தயார்தான்.
சரி அடுத்தது என்ன?
புலிகளை அழித்துவிட்டுப் பிரச்சினைக்குத் தீர்வென்றால்
தர்மம் தோற்றுவிட்டதாகவல்லவா சரித்திரம் எழுதும்!
"ஆயுதங்களைப் போட்டுவிட்டுச் சரணடையுங்கள்"
அதன்பிறகு பேசலாமென்றால்—....
நாங்களென்ன 'சம்பற்பள்ளத்தாக்கு'க் கொள்ளைக்காரரா?
குனியாத தலையும்,
வளையாத முதுகும்,
தணியாத தாகமும்
உள்ளவர் புலிகளென்று உலகறியும்.
சத்தியதேவதைக்கு ஒப்புக் கொடுப்பரென்று
சந்திரிகா அரசுக்கும் தெரியும்.
வா பகையே! வந்தெம் நெஞ்சேறி மிதி.
பூவாகவும், பிஞ்சாகவும் எம் மரமுலுப்பிக் கொட்டு.
வேரைத் தறித்து வீழுத்து.
தீமூட்டி எரியெம் தேசத்தை
எனினும் பணியோமென்பதை நெஞ்சில்வைத்திரு.
இறுதிவெற்றி எவருக்கென்று பகடையுருட்டு;
தோல்வி உனக்கன்றி எமக்கில்லை.
'கிபிர்' இருக்கும் திமிர் உனக்கு.
உலகநாடுகள் அள்ளித் தருமென்ற
எண்ணத்தில் வந்து எரிக்கின்றாய்.
எரித்து முடி.
எல்லாம் எரியுண்டு போனதாய் எண்ணி
குளித்துவிட்டு நீ தலைசீவும்போதே குண்டுகள் வெடிக்கும்.
இதுதான் புலி.
இந்த இரகசியத்துக்குப் பெயர்தான் பிரபாகரன்.
எம்மை வெல்லும் திறன் உனக்குமில்லை;
உன் படைக்குமில்லை.

ஹலோ அநுருத்த ரத்வத்த!
புதுமாப்பிள்ளைக்குப் பெரிய வாழ்த்துக்கள்.
ஐம்பத்தாறு வயதில் உமக்குக் கலியாண ஆசை;
ஆறிரண்டு பருவத்தில் எமக்கு விடுதலை வேட்கை!
எப்படி எம்மை நீ வெல்லுவது சாத்தியமாகும்?
பத்திரகாளியாய் நீங்கள் பலியெடுத்துக் கொள்ள
அப்படியென்ன கேட்டோம் உங்களிடம்?
கொழும்பை எமக்குத் தாவென்றா கேட்டோம்?
காலித் துறைமுகத்துக்கு வேலியிடவா வந்தோம்?
தலதாமாளிகையின் தங்கக் கலசத்தை
கொடுவாள் கொண்டு கொத்தவா நின்றோம்?
சிங்களவருக்கு இந்நாடில்லையென்றாவது சொன்னோமா?
நமது நிலத்தைத்தானே நாங்கள் கேட்டோம்?
"நம்மை நாமாக—... நமது நிலத்தில் வாழ
எம்மை விடும்!" என்பது எப்படித் தவறாகும்?
இதிலென்ன பிழைகண்டு இந்தக் கூத்து?
மாங்கனித் தீவென்றும், மரகதத் தீவென்றும்
நாங்களெல்லாரும் பாட்டுக்கள் பாடினோம்.
நாங்கள் பாட்டுக்கள் பாடிக் கொண்டிருக்க
நீங்கள் வேட்டுகள் தீர்த்துக் கொண்டீர்.



வந்தது வினை.
அதன்பிறகும் உம்மோடு அண்டியிருக்கவென்று
விதம் விதமாய் முயன்றோம்.
நீங்கள் விடவில்லை.
கதை முடிந்து போனது.
கட்டிய கோவணத்தையும் கழற்றென்றீர்கள்;
எப்படி நிர்வாணமாக நிற்கமுடியும்?
வெளியேறிக் கொண்டோம்.
இன்று ஆநிரை கவரவா ஊர் புகுந்துள்ளீர்?
விளைவு என்னவானாலும் விடமாட்டோம்.
எம்மண்ணில் முறியும் ஒவ்வொரு மரமும்
முளைவைத்து விட்டே முறிகிறது.
பிரியும் ஒவ்வொரு உயிரும்
அடுத்தகணமே இன்னோர் உடலாகி நடமாடுகிறது.
தளரோமென்று காற்றுச் சத்தமிடுகிறது.
உன்மீதான கோபத்தில் முகம் சிவந்து
இங்கு வெள்ளைப் பூக்களும் சிவப்பு நிறமாயின.
கருப்பைக்குள் எம்பிள்ளைகள் அசையும் போதே
நெருப்புக்குள் நீந்தப் பயிற்சியெடுக்கின்றன.
எங்கள் அத்திவாரமே வித்தியாசமானது:
புலிகள் கறுப்பு.
பிரபாகரன் நெருப்பு!
விரைவில் உணர்வாய் பகையே!
உன் வெற்றியெல்லாம் வெறும் கனவே: O

# வஞ்சிக்கப்பட்ட தமிழர்: வாக்குறுதிகளும் சூழ்ச்சிகளும்!



*கதைக்கும்போது பரிந்து பேசி, தமிழர்களுக்கு நீதி வழங்கப்போவதாக வாக்குறுதிகளை அள்ளி வீசிய முன்னைய சிங்களத் தலைவர்கள் எல்லாருமே, பின்பு என்ன செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள் என்பதை இக்கட்டுரை எடுத்துக் காட்டுகின்றது. இப்போது – குடாநாட்டை ஆக்கிரமித்து நின்று, அங்கு அபிவிருத்தி வேலைகளை ஆரம்பிக்கப்போவதாகவும், தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண்பதற்கான 'தீர்வுப் பொதி' தயாராகி வருவதாகவும் சந்திரிகா.. அரசாங்கம் பிரச்சாரப்படுத்துகின்ற வேளையில், மு. திருநாவுக்கரசு அவர்களின் இக்கட்டுரை எம்மக்களுக்கு பழைய சரித்திரத்தை நினைவூட்டும்.*

தமிழ் மக்களும் தமிழ்த் தலைவர்களும் தமது தனித்துவத்தைப் பேணியவண்ணம், ஐக்கிய இலங்கையில் சிங்கள மக்களுடன் இணைந்து வாழவும் இலங்கையைச் சுபீட்சம் நிறைந்த ஒரு புதிய தேசமாகக் கட்டியெழுப்பவும் விரும்பினர். மேலும், ஒரு படி மேலே சென்று, சிங்கள பௌத்தத்தின் வளர்ச்சிக்காய்த் தமிழ்த் தலைவர்கள் பாடுபட்டனர். சிங்களத் தலைவர்கள் ஆங்கிலேயரின் கீழ் பெட்டிப் பாம்பாக இருந்த காலத்தில், பௌத்த மதத்தின் மிகமுக்கிய தினமான வெசாக் தினத்தை விடுமுறை தினமாக்க வேண்டும் என்று, சேர் பொன். இராமநாதன் 1880களில் பிரித்தானிய ஆதிக்கத்துக்கு எதிராகக் குரல் எழுப்பி, அதை விடுமுறைதினமாக்கினார்; பௌத்தத்தைப் பேணிக் காப்பதற்கான பௌத்த நிர்வாகம் சம்பந்தமான பிரேரணை மீது, 1888 இல், சட்ட நிருபண சபையில் இராமநாதன் மிகத் தீவிரமாக வாதிட்டார்.

[ஹன்சார்ட், 5. 12. 1888]

பௌத்தத்தின் வளர்ச்சிக்காக இராமநாதன் பெரிதும் பாடுபட்டதை நினைவுகூர்ந்து 7. 12. 1889 இல் ஒல்கொட் என்பவர் இராமநாதனுக்கு எழுதிய கடிதத்தில் புகழாரம் சூட்டியிருந்தார். இத்துடன், ஆனந்தாக் கல்லூரியை ஆரம்பிக்கும் முயற்சியிலும் இராமநாதன் பங்கெடுத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



அத்துடன், கலாநிதி ஆனந்த குமாரசுவாமி, பௌத்த கலை கலாசாரத்திற்கு மிகப்பெருந் தொண்டாற்றியிருந்தார் என்பதும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

சிங்களத் தலைவர்கள் விடுதலை பற்றிச் சிந்தித்திராத காலகட்டத்தில் இலங்கையின் விடுதலைக்கு சேர் பொன். அருணாசலம், தேசிய கொங்கிரஸ் என்னும் ஒரு அமைப்பை 1919இல் ஆரம்பித்தார். இவ்வாறாக தமிழ்த் தலைவர்கள் செயற்பட்டிருந்தபொழுதிலும், தமிழ் மக்கள் இதை ஆதரித்த போதிலும், சிங்களத் தலைவர்கள் தமிழர்களைப் பௌத்தத்தின் எதிரிகளாய் விளக்கி – தமிழின விரோத நடவடிக்கைகளில் ஈடுபடலாயினர். இராமநாதன், அருணாசலம் போன்ற தமிழ்த் தலைவர்கள், சிங்களத் தலைவர்களால் தாம ஏமாற்றப்பட்டும் வஞ்சிக்கப்பட்டும்விட்டதை உணர்ந்து மனம் உடைந்தனர். சிங்களத் தலைவர்களால் தோற்கடிக்கப்பட்ட துயரத்துடனும், விரக்தியுடனும் இவர்கள் இருவரும் இறந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு தருணத்தில், தமிழ் மக்களின் உரிமைகளைச் சிங்களத் தலைவர்கள் ஏற்றும் ஆதரித்தும் பேசுவர்; இன்னொரு தருணத்தில் – அதிகாரத்திலமர்ந்து தம்மை உறுதிப்படுத்திக்கொண்ட பின் – தமிழ் மக்களுக்கெதிராகச் சிங்கள மக்களைத் தூண்டுவதுடன், உள்நாட்டு வெளிநாட்டுச் சக்திகள் அனைத்தையும் ஒன்றிணைத்து, முழு அளவில்

> *" தமிழர்களை நீ பிழையாக நடாத்துவாயானால், அவர்களை நீ புண்படுத்துவாயானால், அவர்களை நீ பிழையாகப் பிரயோகிப்பாயானால், அவர்களை நீ ஒடுக்கினால், துன்புறுத்தினால், அதன் விளைவாக – இலங்கையில் இனத் தனித்துவமும் மொழித்தனித்துவமும பாரம்பரியமும் உடைய தமிழர் ஒரு புதிய தேசிய இன உணர்வுடன் எழுந்து, இப்போது கோருவதை விடவும் அதிகம் கோரும்போது நீ அதை வழங்கவேண்டிவரும். "*

தமிழரை ஒடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவர். சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரித்தும், ஆதரித்தும் ஒரு தருணத்தில் பேசிவிட்டு, நேர்மாறாக இன்னொரு தருணத்தில் நடந்துகொள்ளும் கபடத்தனத்தை, நாம் இனி இக்கட்டுரை முழுவதிலும் காணப் போகிறோம்.

(i) சமஷ்டி முறைதான் இனப்பிரச்சினைக்கான ஒரே சிறந்த தீர்வு என, 1926 இல் பண்டாரநாயக்கா கூறினார்.

(ii) ஈழத்தமிழர் பிரிந்துசெல்லும் சுயநிர்ணய உரிமையுடையவர்கள் என்று, 1944 இல், இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சி கூறியது.

(iii) தமிழுக்கு சம அந்தஸ்து கொடுக்கப்படவேண்டும் என்று – 1950 இன் மத்திவரை – ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி, இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி ஆகிய அனைத்து சிங்களத் தலைமைத்துவக் கட்சிகளும் கூறின.

(iv) சமஷ்டி முறையே சிறந்த தீர்வு என்று, 1995 இல், ஜே. ஆர். கூறினார்.

இவ்வாறு சிங்களத் தலைவர்கள் கூறியிருந்த போதிலும், இவற்றிற்கு முரணாக அவர்கள் பின்வருமாறு நடந்திருக்கிறாகள்.

1) 1958 இல் தமிழருக்கெதிரான படுகொலை பண்டாரநாயக்கா ஆட்சியின் கீழ் கட்டவிழ்த்துவிடப்பட்ட நான்காவது தினம், அதனைக் கட்டுப்படுத்த அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி ஊரடங்கு சட்டத்தைப் பிறப்பிக்குமாறு, சில தமிழ்ப் பிரமுகர்கள், பிரதமராக இருந்த பண்டாரநாயக்காவிடம் கோரியபோது, ''அற்ப விடயத்தைப் பெரிதுபடுத்துகிறீர்கள்'' என்று கூறியதன்மூலம், இனப்படுகொலையை அவர் அங்கீகரித்தார்.

2) ''இனப்பிரச்சினைக்குத் தீர்வு தமிழரின் தலைகளை நொருக்குவதுதான்'' என்று, 1982 இல், லலித் அத்துலத்முதலி கூறினார்.

3) ''யாழ்ப்பாணத்தவர்களின் உயிர்களைப் பற்றியோ அவர்கள் எம்மைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றியோ நான் கவலைபபடவில்லை' என்று, 1983 இனப்படுகொலை முடிந்தவுடன் ஜே. ஆர். கூறினார்.

இவ்வாறாக, ஒருபுறம் வாக்குறுதி அளித்துவிட்டு தாம் பலமுற்றிருக்கையில் இனப்படுகொலை புரிவதும், இன ஒடுக்குமுறையை முழுமனதுடன் நடத்துவதும் சிங்களத் தலைவர்களின் ஒரு இயல்பாகவும் – இவ்வாறான விதத்தில் வஞ்சிக்கப்படுவது தமிழரின் வரலாறாகவும் உள்ளன. இவற்றை ஆதாரபூர்வமாக, 1925 இல் இருந்து படிமுறையாக நோக்குவோம்.

1) 1925 இல் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த சிங்களத் தலைவர்கள், வைத்தியலிங்கம் துரைசாமியின் வீடாகிய 'மகேந்திர இல்லத்'தில் வைத்துத் தமிழ்த் தலைவர்களுடன், இலங்கைத் தேசிய கொங்கிரசின் சார்பில் ஒரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். அந்த ஒப்பந்தத்தின்படி, இலங்கையின் வட – கிழக்கு மாகாணங்கள் ஓர் அலகு என்பது ஒப்புக்கொள்ளப்பட்டு, அந்த அடிப்படையில் ஒப்பந்தத்தின் சரத்துக்களும் அமைக்கப்பட்டன. அவ்வாறு எழுதப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ள அனைத்து அம்சங்களையும் சிங்களத் தலைவர்கள், ஒருதலைப்பட்சமாகப் பின்பு கிழித்து எறிந்தனர். தமிழ் மக்களின் சார்பில் எட்டுத் தமிழ்த் தலைவர்களும், தேசிய கொங்கிரசின் சார்பில் எட்டுப் பேர்களும் 1925, 12 ஆம் மாதம் 19 ஆம் திகதி கைச்சாத்திட்டனர்.

[எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா, இலங்கைத் தேசிய கொங்கிரசின் கைநூல், 1919 - 1928, கொழும்பு, பக். 662 - 663]

2) பண்டாரநாயக்கா 1926 இல் யாழ்ப்பாணத்தில் உரையாற்றும்போது, இனப்பிரச்சினைக்குச் சமஷ்டித் தீர்வு அவசியம் என்று வலியுறுத்தினார் அவ்வாண்டு ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் எழுதிய கட்டுரையில், இலங்கைக்கு சமஷ்டி ஆட்சிமுறை வேண்டும் என்றும் அது கண்டிச் சிங்களவர், கரையோரச் சிங்களவர், இலங்கைத் தமிழர் என்றுமூன்று மாநிலங்களாக அமையவேண்டுமென்றும் அவர் கூறியிருந்தார். இவ்வாறமையும் சமஷ்டி மாநிலம் ஒவ்வொன்றும் பூரண சுயாட்சி அதிகாரம் உடையதாயிருத்தல் வேண்டுமென்றும் அவர் கூறினார். ஆயிரத்தொரு எதிர்ப்புகள் இதற்

கெதிராக எழுந்தாலும் இறுதியில் இவ்வாறானதொரு சமஷ்டித் தீர்வே அவசியம் என்றும் கூறியிருந்தார்.

[மோணிங் லீடர், ஜூலை 17,1926,

3) 1944 இல் ஜே. ஆர். ஜெயவர்த்தனா, தனிச் சிங்கள மசோதாவைப் பிரேரித்தபோதிலும் இறுதியில், தமிழும் சிங்களமும் உத்தியோக மொழிகளாக வேண்டும் என்ற திருத்தத்தை ஏற்று. அதற்குச் சார்பாக உரையுமாற்றினார். மேற்படி மசோதா மீதான விவாதத்தில் பேசிய பண்டாரநாயக்கா, தமிழ் இலக்கியம் மிகவும் முக்கியத்துவம்வாய்ந்த ஒன்று என்றும், தமிழை உத்தியோக மொழியாக அங்கீகரிப்பது அவசியம் என்றும் வாதிட்டார். ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் உத்தியோக மொழிகளாயுள்ள நாடுகளைச் சுட்டிக்காட்டிய பண்டாரநாயக்கா, இலங்கையில் தமிழையும் சிங்களத்துடன் உத்தியோக மொழியாக்குவதில் எந்தவித இடருமில்லை என்றும் கூறினார்.

[ஹன்சார்ட், மே 24 - 25, 1944]

4) இலங்கையில் சிங்களவரும் தமிழரும் தத்தமக்கென தனித்துவமான பிரதேசங்களைத் தாயகங்களாகக் கொண்டுள்ளனர் என்பதுடன், அவர்களுக்கென தனித்துவமான மொழி, கலாசாரம், பொருளாதார வாழ்வு உண்டு. இதன்பிரகாரம் தமிழ்த்தேசிய இனத்தினர், கேள்விக்கிடமற்ற வகையில், பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமையை உடையவர்கள் என்று, இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சி 1944இல் தீர்மானம் நிறைவேற்றியது.

[மைக்கல் றொபேர்ட்ஸ், இலங்கைத் தேசிய கொங்கிரசின் ஆவணங்கள், கொழும்பு, 1927, பக். 2575 - 2578]

யாகச் செயற்படுத்தப்படும்'' என்று, டி. எஸ். சேனநாயக்கா, 1951 இல் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

[ஹன்சார்ட்,
யூலை 24, 1951, சி சி 1550- 1551]

9) 1954 இல் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல மக்கள் மத்தியில் உரையாற்றுகையில், ''எனது அரசாங்கம் வகுப்புவாதத்தை முற்றும் நிராகரிக்கின்றது. அது சிங்களத்துடன் தமிழுக்கும் இலங்கை முழுவதும் சம அந்தஸ்து கொடுக்கப்படவேண்டும் என்று தீர்மானித்துள்ளது, இது வெறும் வார்த்தைஜாலம் அல்ல; இவ் உறுதிமொழியை எழுத்துக்கெழுத்து நடைமுறைப் படுத்துவேன்'' என்று கூறினார்.

[ இந்து ஒகன், ஒக்ரோபர் 1, 1954 ]

ஆனால், கொழும்பு சென்றதும் இவர் இதனை மறுத்துரைத்தார்.

10) 1955 இல் லங்கா சமசமாஜக் கட்சி, நாடாளுமன்றத்தில் தமிழும் சிங்களமும் உத்தியோக மொழி ஆக்கப்படவேண்டும் என்ற பிரேரணையைக் கொண்டுவந்தபோது, கொத்தலாவல அரசாங்கம் அதை எதிர்த்தது.

11) தமிழுக்கு சம அந்தஸ்து கொடுக்கப்பட வேண்டும் என்று என். எம். பெரேரா பல காரணங்களைக் காட்டி உரையாற்றுகையில், தன்னை எதிர்த்துநின்ற கொத்தலாவல அரசாங்கத்தையும் சுதந்திரக் கட்சியையும் பார்த்துப் பின்வருமாறு கூறினார்: ''வட - கிழக்கில் வாழும் தமிழ் மக்களை தமிழைப் பிரதேச மொழியாகவும் சிங்கள மொழியை மட்டும் உத்தியோக மொழியாகவும் ஏற்கு

*ஒரு தருணத்தில் தமிழ் மக்களின் உரிமைகளை சிங்களத் தலைவர்கள் ஏற்றும் ஆதரித்தும் பேசுவர்; இன்னொரு தருணத்தில் – அதிகாரத்திலமர்ந்து தம்மை உறுதிப்படுத்திக்கொண்டபின் – தமிழ் மக்களுக்கெதிராகச் சிங்கள மக்களைத் தூண்டுவதுடன், உள்நாட்டு வெளிநாட்டுச் சக்திகள் அனைத்தையும் ஒன்றிணைத்து, முழு அளவில் தமிழரை ஒடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவர்.*

5) 1945 இல் டி. எஸ். சேனநாயக்கா அரசாங்க சபையில் உரையாற்றுகையில், ''சுதந்திரத்திற்கான எமது மகத்தான போராட்டத்தில், தமிழர்களின் சென்ற தலைமுறையைச் சேர்ந்த பெருந்தலைவர்கள் தோளோடு தோள் சேர்ந்து போராடினர் என்பதை நான் உறுதியாகக் கூறுவேன்'' என்றும், ''தமிழர்களின் விசேட இயல்புகளைப்பற்றி எமக்குத் தெரிந்திருப்பதுடன், அவற்றால் நாம் ஆகர்சிக்கப்படுகின்றோம். இலங்கையின் நல்வாழ்விற்கு தமிழர்கள் அவசியம்'' என்றும் கூறினார்.

[ஹன்சார்ட், நொவெம்பர் 8, 1945, சி 6931 ]

அவர் தோட்டத் தொழிலாளர்கள் பற்றிக் கூறுகையில், தோட்டத் தொழிலாளர்கள் நாடற்றவர்களாக்கப்படுவார்கள் என்றொரு பிழையான அபிப்பிராயம் உண்டு என்றும், உண்மை அவ்வாறானது அல்ல என்றும் கூறியதோடு, மேலும், ''நாங்கள் இந்தியர்களை மதிக்கிறோம், அவர்களை நேசிக்கிறோம், அவர்களை மூன்னுதாரணர்களாகக் கொள்வோம்'' என்றும் கூறியிருந்தார்.

[ ஹன்சார்ட், நொவெம்பர் 8, 1945, சி ]
7100 - 7101]

இவ்வாறு சுதந்திரத்திற்கு முன்பு கூறிய டி. எஸ். சேனநாயக்கா, சுதந்திரம் அடைந்ததும், தான் முன்பு கூறியதற்கு மாறாக, தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமையையும் பிரஜா உரிமையையும பறித்து, அவர்களை நாடற்றவர்களாக்கினார்.

6) ''எமது முக்கியமான கைங்கரியம் இத்தேசத்தை ஒரு மொழியால் அன்றி இரு மொழியாலும் கட்டியெழுப்புவதாகவே உள்ளது'' என்று, 1948 இல டி. எஸ். சேனாநாயக்கா கூறினார்.

[ சமூக, சமய நடுநிலையம், சிறீலங்காவில் இன மதம், கொழும்பு, (1978) பக். 72 ]

7) 1951 இல் சிறீலங்கா சுதந்திரக் கட்சி வெளியிட்ட கொள்கைப் பிரகடனத்தல், சிங்களமும் தமிழும் நாட்டின் உத்தியோக மொழிகளாக்கப்படவேண்டும் என்பது மிகவும் அத்தியாவசியமான விடயம் என்று குறிபபிடப்பட்டுள்ளது.

[சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைப் பிரகடனமும் யாப்பும், 1951 ]

8) ''தமிழும் சிங்களமும் இலங்கையின் தேசிய மொழியாகவும் உத்தியோக மொழியாகவும் இருக்கவேண்டும் என்று தீர்மானித்துவிட்டோம். அதனை விரைவில் நடைமுறைப் படுத்துவதற்கென ஒரு விசாரணைக் கொமிசனை நியமித்துள்ளேன். எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக தமிழும் சிங்களமும் உத்தியோக மொழி

மாறு நிர்ப்பந்திப்பீர்களேயானால், அது இந்நாட்டில் இரத்தக்களரியையும் இனக்கலவரங்களையும் சிவில் யுத்தத்தையும் உண்டாக்கும்.''

[ ஹன்சார்ட்,
ஒக்ரோபர்19, 1955, சி சி 572 - 626]

12) பண்டாரநாயக்கா 1926 இல் எழுதியதற்கும் 1944 இல் பேசியதற்கும் முரணாக, 1956 இல் தனிச் சிங்கள மசோதாவை நாடாளுமன்றில் தாக்கல்செய்தபோது. இலங்கைக் கொம்யூனிஸ்டுகளும் சமசமாஜிகளும் அதைக் கடுமையாக எதிர்த்து, தமிழையும் உத்தியோக மொழியாக்கவேண்டும் என்று வாதாடினர். இதில் உரையாற்றிய என். எம். பெரேரா பின்வருமாறு கூறினார்: ''கடந்தகால வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தீர்களேயானால், சிறுபான்மை இனங்களை, சாத்தியமான ஒவ்வொரு கட்டத்திலும் டி. எஸ். சேனநாயக்கா காலத்தில் இருந்து நீங்கள் ஏமாற்றி - துரோகம் செய்து வருவதைக் காணமுடியும். ஒருகட்டத்தில் வாக்குறுதி அளித்துவிட்டுப் பின்பு அதை வேறொரு கட்டத்தில் மீறுவதை வரலாறு முழுவதிலும் காணலாம்.''

[ ஹன்சார்ட், யூன் 1956, சி 1861 ]

இவ் விவாதத்தில் கொல்வின் ஆர். டி. சில்வா பேசுகையில், ''எமது மக்களுக்கு ஒரு அரசு வேண்டுமா அல்லது இரு அரசுகள் வேண்டுமா ? ஒரு இலங்கை வேண்டுமா அல்லது இரு இலங்கை வேண்டுமா ? ஒரு சுதந்திரமான இலங்கை வேண்டுமா அல்லது இரத்தம் சிந்தும் இரு துண்டுகளாக்கப்பட்ட இலங்கை வேண்டுமா ?'' என்று கேள்வி எழுப்பியதோடு, தொடர்ந்து பண்டாரநாயக்காவைப் பார்த்து, ''தமிழர்களை நீ பிழையாக நடாத்துவாயானால், அவர்களை நீ புண்படுத்துவாயானால், அவர்களை நீ பிழையாகப் பிரயோகிப்பாயானால், அவர்களை நீ ஒடுக்கினால், துன்புறுத்தினால் அதன் விளைவாக இலங்கையில் இனத் தனித்துவமும் மொழித் தனித்துவமும் பாரம்பரியமும் உடைய தமிழர் ஒரு புதிய தேசிய இன உணர்வுடன் எழுந்து, இப்போது கோருவதைவிடவும் அதிகம் கோரும்போது, நீ அதை வழங்கவேண்டிவரும்'' என்று எச்சரித்தார்.

[ ஹன்சார்ட், யூன் 1956, சி 1913 ]

இலங்கைத்தீவின் சிறுபான்மை மக்களுக்கு அரசியல் அமைப்பு வாயிலாகப் பிரித்தானிய ஆட்சியாளர் வழங்கிய இறுதிப் பாதுகாப்பை - 29 ஆவது சரத்தை இதே கொல்வின் நீக்கிவிட்டு, சிங்கள - பௌத்த குடியரசாக இலங்கைத்தீவினை பிரகடனம் செய்யும் புதிய தோர் அரசியல் அமைப்பை உருவாக்கிய பெருமகனாக விளங்கினார் என்பது, பின்னைய வரலாறாகும்.

(அடுத்த இதழில் முடிவுறும்)

## சமரச...

( 4 ஆம் பக்கத் தொடர்ச்சி )

பேச்சுக்களை நடாத்த வரும்படி சிங்கள அரசை நிர்ப்பந்திப்பதுதான்புலிகளின் நோக்கமாகும்.

புலிகள் பேச்சுவார்த்தைக்கு எதிரிகளல்லர்; அதுபோல, பயனற்ற பேச்சுவார்த்தைகளுக்கு, புலிகள் நண்பர்களுமல்லர்.

''சந்திரிகா அரசாங்கம் தரவிருந்ததைபெற்றுக் கொண்டிருக்கலாமே! அந்தச் சந்தர்ப்பத்தைக் கைவிட்டதால் இப்போது, குடாநாட்டையும் இழந்தல்லவா நிற்கின்றோம்'' என்று, புலிகளை நோக்கிச் சிலர் சுட்டுவிரல் நீட்டுகின்றனர்.

மேலோட்டமான பார்வைக்கு இந்தக் கேள்வி, அர்த்தம் பொதிந்ததுபோல் தோன்றும்;

சற்று ஆழமாகப் பார்த்தால், அதில் உண்மை எதுவும் இல்லை என்ற உண்மை தெரியும்.

பதவி ஏற்றவுடன் தமிழினத்திற்கு வழங்குவேன் என்று சந்திரிகா அம்மையார் சொன்னது ஒன்று;

பின்னர் சட்டவரைவாக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பித்தது வேறு;

இப்போது, நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் விவாதத்தைத் தொடர்ந்து தீர்வுப்பொதி இன்னொன்றாக மாறிவருகின்றது.

பி. பி. சி. கொழும்பு முகவர் புளோரா பொஸ்வேட் சொல்லியிருப்பதுபோல, 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான' கதையே, சந்திரிகா அரசாங்கத்தின் தீர்வுப்பொதிக்கும் நடந்துள்ளது.

இன்று இனப்பிரச்சினையின் தீர்வுவிவகாரம் தொடர்பாக அம்மையார், தனது முன்னைய - முற்போக்கு - முகமூடியை இழந்து அம்பலமாகிவிட்டார் என்பது வெளிப்படை.

ஆனால், சந்திரிகா அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தை நாட்களில் அவரது உண்மை முகத்தை - சதி நோக்கத்தை - புலிகள் இயக்கம் கண்டுகொண்டுவிட்டது; அதனால்தான், பேச்சுவார்த்தைக்கு காலக்கெடு விதித்து, அதன்பின் பேச்சிலிருந்து புலிகள் விலகிக்கொண்டனர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக சந்திரிகா - ரத்வத்த அரசாங்கத்திடம், அன்றே ஒரு தெளிவான திட்டம் இருந்தது.

அதாவது,

தமிழரின் விடுதலைப் போராட்டத்தை மழுங்கடித்துவிடுவது என்பதே அதுவாதும். இதற்கு இரண்டு வழிமுறைகளை அது தேர்ந்தெடுத்து வைத்திருந்தது.

(1) தமிழ்த் தேசியத்தைப் படிப்படியாக சிதைத்துவிடும் நோக்கங்கொண்ட ஒரு அரைகுறைத் தீர்வுத்திட்டத்தை அமுல்படுத்துவது. இதைப் புலிகள் ஏற்காது போனால்,

(2) முழுப் படைபலத்தையும் ஒருங்குதிரட்டிப் பயன்படுத்தி, தமிழீழ தேசியத்தின் பாதுகாப்புக் கவசமான புலிகள் இயக்கத்தை அழித்து அரசியல் அரங்கில் இருந்து அதை நீக்கி - அதன் பின் அரைகுறைத் தீர்வுத்திட்டம் ஒன்றை இனப்பிரச்சிலனக்கான தீர்வாக வைப்பது. அதாவது, இராணுவ வழிமூலம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பது.

பேச்சை அன்றே முடித்துக்கொள்ளாது நீட்டியிருந்தால், இப்போதைய 'கட்டெறும்புப்' பொதியே புலிகளுக்கு முன்னும் வைக்கப்பட்டிருக்கும்; அத்துடன், பேச்சும் முறிந்திருக்கும்; போரும் தொடங்கியிருக்கும்; குடாநாட்டுப் படையெடுப்பும் நடந்திருக்கும்.

எனவே, பேச்சு முறிவையும் குடாநாட்டு ஆக்கிரமிப்பையும் ஒன்றாகப்போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது.

இனப்பிரச்சினைக்கு இராணுவ வழியில் தீர்வு காண்பதுஎன்பதும், அதை குடாநாட்டு ஆக்கிரமிப்புடன் தொடக்கிவைப்பது என்பதும், சந்திரிகா-ரத்வத்த அரசாங்கத்தின் மூலோபாயம் ஆகும்.

புலிகள் இயக்கத்தினது அரசியல் சித்தாந்தம் பற்றி சிங்கள அரசுக்கு நன்கு தெரியும்; அதுபோல, தமிழீழ மக்களது தேசிய நலன்களைப் பெற்றுக்கொடுப்பதில் தலைவர் பிரபாகரன் எவ்வளவு தூரம் உறுதியாக இருக்கின்றார் என்பதும், அரசுக்குத் தெரியும்.

அரைகுறைத்தீர்வுப்பொதிகளைக் கொடுத்து அல்லது ஆசைகாட்டி - ஏமாற்றி விலைக்கு வாங்கப்படக்கூடிய நிலையில் புலிகள் இயக்கம் இல்லை என்பதும், அரசுக்குத் தெரியும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, புலிகள் இயக்கத்தினது இருப்பும் - தமிழீழ தேசியத்தினது இருப்பும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளது என்பது, உலகிற்கே தெரியும்.

தமிழீழ தேசியம் என்ற அரசியல் உணர்வு தமிழ் மக்களிடம் இருக்கும்வரை, தமிழீழத்தை அடிமைகொள்வது என்பது முடியாதது.

புலிகள் இயக்கம் இருக்கும்வரை தமிழீழ தேசியத்தை அழிப்பது இயலாதது. இந்த நிலையில், சந்திரிகா அரசாங்கம் ஒரு சதித்திட்டம் பற்றி நம்பிக்கை வைத்திருக்கின்றது.

அதுதான், புலிகள் இயக்கத்தைத் தவிர்த்துவிட்டு ஒரு அரைகுறை தீர்வுத்திட்டத்தை அமுல்படுத்தல் என்பதாகும். தமிழர் தேசியத்திற்கு துரோகம் இழைத்துவரும் தமிழ்க் குழுக்களைப் பயன்படுத்தி இதைச் சாதிக்க, அரசு ஆசை கொண்டுள்ளது.

இது நிராசையாகும் என்பதும் சிங்களப் பேரினவாதத்தின் ஒரு அழகான கற்பனை என்பதும் மிக விரைவில் தெரிந்துவிடும்!

# தனியார்மயமாக்கல் - தடுமாறும் அரசாங்கம்!

சி. வரதராஜன்

வளர்முக நாடுகளின் பொருளாதார நெருக்கடிகளையும் பின்னடைவுகளையும் அதனால் அவை எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளையும் கவனத்திற்கொண்டு, இவற்றைச் சீர் செய்யும் நோக்குடன், 1980களில் உலக வங்கி, அமைப்பு ரீதியான சீராக்கல் கொள்கையை அறிமுகப்படுத்தியது. இக் கொள்கையின் முக்கிய செயற்பாடுகளில் ஒன்று, அரசு உடைமையாக உள்ள நிறுவனங்களை தனியார் துறைக்கு விற்றல் என்பதாகும். இதன்மூலம் அரசு நிறுவனங்களை திறமையானதாக மாற்றுவதுடன், அரசினது வரவு செலவுத் திட்டத்தின் பற்றாக் குறையின் அளவைக் குறைக்க முடியுமெனவும் உலக வங்கி ஆலோசனை கூறியது. இத் தனியார்மயமாக்கல் கொள்கையை நடைமுறைப் படுத்தும் நாடுகளுக்கு சலுகை அடிப்படையிலான கடன்களை வழங்கவும், உலக வங்கி முன்வந்தது. வளர்முக நாடுகளின் வளங்களை வளர்ச்சியடைந்த நாடுகள் மறைமுகமாகச் சுரண்டுவதற்கு வழிவகுக்கும் ஒரு நவ கொலனித்துவக் கொள்கையாகவே, உலக வங்கியின் அமைப்பு ரீதியான சீராக்கல் கொள்கை அமைந்துள்ளது. பல்தேசிய நிறுவனங்கள் தமது முதலீடுகளை வளர்முக நாடுகளில் மேற்கொள்வதற்கு வழிவகுத்துக் கொடுப்பதன்மூலம், வளர்முக நாடுகளின் செல்வத்தினை, வளர்ச்சியடைந்த நாடுகளுக்குக் கொண்டுசெல்வதற்குரிய ஒரு பாதையினை அமைத்துக் கொடுப்பதே, உலக வங்கியின் வேலையாகும்.

அதிகரித்துவரும் பாதுகாப்புச் செலவு, கட்டுக்கடங்காமல் விரிவடைந்துவரும் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை போன்றவற்றினால் நிதி நெருக்கடிக்குள்ளாகியிருந்த இலங்கை அரசாங்கம், அரசு நிறுவனங்களை விற்பதன் மூலம், உடனடியாகக் காசு கிடைக்கும். மேலும், உலக வங்கியின் கடன் உதவியும் கிடைக்கும் என்பதனால், தனியார்மயப்படுத்தலை உடனடியாக நடைமுறைப்படுத்த ஆரம்பித்தது. 1989 ஆம் ஆண்டு டிசெம்பரில், யுனைட்டட் மோட்டேர்ஸ் என்ற அரசு நிறுவனத்தை 9½ கோடி ரூபாவிற்கு தனியாருக்கு விற்றதன்மூலம், அன்றைய ஐ. தே கட்சி அரசாங்கம் இதனை ஆரம்பித்துவைத்தது. அப்போது எதிர்க்கட்சியில் இருந்த பொதுஜன ஐக்கிய முன்னணி இத் தனியார்மயமாக்கலை எதிர்த்ததுடன், குறைந்த விலைக்கு அரசு நிறுவனங்கள் விற்கப்படுவதாகவும் குற்றம் சாட்டியது.

எனினும், பின்னர் பதவிக்கு வந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம், தனியார்மயமாக்கலை தீவிரமாக நடைமுறைப்படுத்த ஆரம்பித்தது. இதற்காக 1994 இல் உருவாக்கப்பட்ட 'பொது அரசு முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு'விற்கு (பி.ஈ.ஆர் சி') ஜனாதிபதி சந்திரிகா, தனது குடும்ப நண்பரான திரு. ராஜன் ஆசீர்வாதத்தினை தலைவராகநியமித்தார் 1995 இல் தனியார்மயமாக்கல்மூலம் 1300 கோடி பா திரட்டுவதென இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. எனினும், 1995 ஏப்ரில் 19 இல் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து யுத்தம் தீவிரமடைந்தமை, தொழிற்சங்கங்களிடமிருந்து எழுந்த எதிர்ப்புகள் போன்றவற்றினால், 1995 இல் தனியார்மயமாக்கலினால் பெறத் திட்டமிட்ட இலக்கு, 1300 கோடி ரூபாவில் இருந்து 500 கோடி ரூபாவாகக் குறைக்கப்பட்டது.

1996 ஆம் ஆண்டு, அதாவது இந்த ஆண்டு, தனியார்மயமாக்கலின்மூலம் 2100 கோடி ரூபா திரட்டுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதுவும் சாத்தியமற்றதாக இருக்கும் என்பதனையே அண்மைக்கால நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. யுத்தம் கொழும்புக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளமை, அரசின் தனியார்மயமாக்கல் முயற்சிகளைப் பெரிதும் பாதித்துள்ளது. அரசாங்கம் விற்க முயற்சித்த பல நிறுவனங்களுக்கு குறைந்த விலையே கேட்கப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட மூலதன அபிவிருத்தி முதலீட்டு நிறுவனத்தில் தான் வைத்திருந்த 40.8% மான பங்குகளை 40% ப்படி அரசாங்கம் விற்க முற்பட்ட போது, 2. 8% மான பங்குகள் மட்டுமே வாங்கப்பட்டன. அதுவும் 5 மாதங்களின் பின்னரே வாங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஓரியன்ட் லங்கா லிமிட்டெட் நிறுவனத்தின் 60% பங்குகளை ஒரு பங்கு 1000 ரூபாப்படி அரசாங்கம் விற்க முற்பட்டது. ஆனால், இதற்குக் கேட்கப்பட்ட ஆகக்கூடுதலான விலை 410 ரூபா மட்டுமே. இதன்படி, இந்த நிறுவனத்தின் சொத்தின் மொத்தப் பெறுமதி ஆயிரம் மில்லியன் ரூபா; ஆனால் கேட்கப்பட்ட தொகை 738 மில்லியன் ரூபா மட்டுமே. இதேபோன்று லங்கா மின்சாரக் கம்பனியின் (எல்.ஈ.சி. ஓ ) 2040 மில்லியன் ரூபா பங்குகளை அரசாங்கம் விற்க முற்பட்டபோது, 1500 மில்லியன் ரூபா மட்டுமே கேட்கப்பட்டது. லங்கா மின்சாரக் கம்பனியை (எல். ஈ. சி. ஓ. ) மின்சக்தி அமைச்சர் என்ற வகையில் விற்று, பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் முயற்சியில் ரத்வத்த ஈடுபட்டு வருகின்றார். இந்நிலையில் இவற்றின் விற்பனைகளை அரசாங்கம் பிற்போட்டுள்ளது. இது ஒருபுறமிருக்க, தனியார்மயமாக்கலுக்கு எதிர்ப்பலைகள் சிறீலங்காவில் உருவாகிவருகின்றன. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கூட்டுக் கட்சிகள் - குறிப்பாக லங்கா சமசமாஜக் கட்சி - தவியார்மயமாக்கலைப் பகிரங்கமாக எதிர்த்து வருகின்றது. இக் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவாரன திரு. வாசுதேவ நாணயக்கார, கட்சியின் சார்பில் அமைச்சராக இருக்கும் திரு பேனாட் சொய்சாவை பதவி விலகும்படி பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்தமை குறிப்பிடத்தக்கது.

மறுபக்கம், தொழிற்சங்கங்களிடமிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் எதிர்ப்புகள் கிளம்பத் தொடங்கிவிட்டன. தனியார்மயப்படுத்தப்பட்ட நிறுவனங்கள் சமூகநலனைப் புறக்கணித்து, முற்றுமுழுதாக இலாபநோக்கத்தின் அடிப்படையில் இயங்கத் தொடங்கவே, மக்களின் எதிர்ப்பலைகள் உருவாகிவிட்டன. தனியார்மயப்படுத்தப்பட்ட போக்குவரத்து சேவை நிறுவனங்கள் பஸ் கட்டணங்களை உயர்த்த ஆரம்பித்துவிட்டன. தனியார்மயப்படுத்தப்பட்ட 'கொழும்பு காஸ், நீர் கம்பனி' அண்மையில் தனது கட்டணத்தை 10%த்தினால் உயர்த்தி உள்ளது. உயர்ந்தளவிலான பணவீக்கம், அதிகரித்துவரும் வேலையின்மை என்பவற்றின் விளைவாக குறைந்த வாழ்க்கைத்தரத்தினை அனுபவிக்கும் மக்களை மேலும் நெருக்கடிக்குள் தள்ளுவதாக, இக்கட்டண உயர்வுகள் அமைந்துள்ளன.

அரசின் தனியார்மயமாக்கலை தொழிற்சங்கங்கள் மூர்க்கத்தனமாக எதிர்க்கின்றன. அண்மையில், இலங்கை மின்சார சபையின் உடைமையாக உள்ள லங்கா மின்சாரக் கம்பனியை (எல். ஈ. சி. ஓ. ) 'தனியார்மயமாக்குவதற்கு அரசாங்கம் எடுத்த முயற்சியை எதிர்த்து, இலங்கை மின்சாரசபை ஊழியர்கள், சிறீலங்காவை நான்கு நாட்கள் இருளில் மூழ்கவைத்தமை குறிப்பிடத்தக்கது. சிறீலங்காப் பொருளாதாரத்தின் எதிர்காலம் இருள்மயமானது என்பதற்கான அறிகுறியே இது. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் இயந்திர சாதனங்களை சேதமாக்கியமை, இலங்கைத் தொழிலாளர்களின் தொழில் ஒழுக்கம் தொடர்பான ஒரு அச்ச உணர்வினை, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. ஏற்கெனவே யுத்த பீதியினால் மிரண்டுபோயிருக்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை, கட்டுப்பாடற்ற இலங்கைத் தொழிலாளர்படை பயமுறுத்தி வெளியேற்றிவிடப்போகின்றது.

தனியார்மயமாக்கலுக்கு எதிராக அரசாங்கத்திற்கு உள்ளேயும் வெளியேயும் எழுகின்ற பலத்த எதிர்ப்புக்களும், யுத்த நெருக்கடிகளினால் கொழும்பில் முதலீட்டுச் சூழல் பாதிக்கப்பட்டுள்ளமையும், அரசின் தனியார் மயமாக்கல் முயற்சிக்குப் பெரும் பின்னடைவினை ஏற்படுத்தியுள்ளன. எனவே, தனியார்மயமாக்கல்மூலம் இவ்வாண்டு கிடைக்கும் எனத் திட்டமிடப்பட்ட 2100 கோடி ரூபாவினைப் பெறமுடியாமற் போகலாம். இவ்வாண்டுக்கான பாதுகாப்புச் செலவு, திட்டமிட்ட 3800 கோடி ரூபாவிற்குப் பதிலாக 4600 கோடி ரூபாவாக இருக்கும் என, பிரதி நிதியமைச்சர் ஜி. எல். பீரிஸ் அண்மையில் கூறியுள்ளார். இந்நிலையில் தனியார்மயமாக்கலும் பாதிக்கப்பட்டால், வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை 11000 கோடி ரூபா என்ற உயர்ந்த மட்டத்திற்கு அதிகரிக்கும். இந்நிலையில் அரசாங்கத்திற்கு இருக்கின்ற ஒரே வழி, தனது மூலதனச் செலவுகளைக் குறைப்பதே ஆகும். அதாவது, எதிர்காலப் பொருளாதார வளர்ச்சியைத் தியாகம் செய்வதே, அரசாங்கத்திற்கு இருக்கும் ஒரே வழியாகும்.

தனியார்மயமாக்கலை எதிர்த்து இ–து சாரியினரும் தொழிற்சங்கத்தினரும தேசிய பொருளாதாரத்திற்கு அழைப்பு விடுக்கின்றனர். மறுபுறம் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவை தனியார்மயமாக்கலை ஆதரித்து, பூகோளப் பொருளாதாரத்திற்கு அழைப்பு விடுக்கின்றன. அரசாங்கம் எதனை ஏற்கப் போகின்றது? தனியார்மயமாக்கலிலிருந்து அரசாங்கம் பின்வாங்குமேயானால், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கையில் எதிர் விளைவுகளை ஏற்படுத்தும். அதுமட்டுமன்றி, அரசுத்துறை ஊழியர்களைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கத்தின் இயலாமையை இது வெளிப்படுத்தும். அதேநேரத்தில், உலகவங்கி தனது உதவிகளை நிறுத்துவதாகப் பயமுறுத்தி, கடுமையான நிபந்தனைகளை இலங்கை மீது விதிக்கும். வெளிநாட்டு உதவிகளில் பெருமளவு தங்கியிருக்கும் இலங்கையினால் இதனைத் தாங்கிக்கொள்ள முடியுமா? பொருளாதாரம் ஒருபெரும் அழிவுக் காலத்தினை நோக்கி நகர்கின்ற அறிகுறி தென்படுகின்ற இக்கட்டத்தில், அபிவிருத்திக் கொள்கையை பின்பற்றவேண்டிய பெரும்தேவை இன்று உள்ளது. வானளாவ உயர்ந்துவரும் பாதுகாப்புச் செலவின் மத்தியில், அபிவிருத்தி என்பது பகற்கனவாகவே அமையும்! ○

### தனியார்மயமாக்கலின் தீமைகள்

(1) அரசாங்கத் தொழில் முயற்சிகள் சமூகநலன், சமத்துவம், வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு இயங்கும்; ஆனால், தனியார்மயப்பட்ட நிறுவனங்கள் இலாப நோக்கத்தை முதன்மைப்படுத்துவதனால், சமூகநல நோக்கங்கள் புறக்கணிக்கப்பட்டுவிடும்.

(2) தனியார் மயப்படுத்தலினால் வேலை வாய்ப்புக்கள் குறைவடையும்.

(3) போக்குவரத்து, மின்சாரம், தொலைத்தொடர்பு போன்ற சேவைத் துறை நிறுவனங்கள் தனியார்மயப்படுத்தப்படும்போது, இவை மக்களிடம் இருந்து அறவிடும் கட்டணங்களை உயர்த்தும்.

### தனியார்மயமாக்கல், மக்கள்மயமாக்கல் என்றால் என்ன?

அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளை தனியாருக்கு விற்றல் என்பதனை தனியார்மயமாக்கல் குறிக்கின்றது. இத் தனியார்மயப்படுத்தலில் மக்களையும் ஊழியர்களையும் பங்குகொள்ளவைக்கும் செயற்பாடே மக்கள்மயப்படுத்தலாம். அரசாங்க நிறுவனங்களின் சொத்தில் 60% மான பங்குகளை தனியார் முதலீட்டாளர்களுக்கும் 30% மான பங்குகளை பொதுமக்களுக்கும் 10% மான பங்குகளை ஊழியர்களுக்கும் வழங்கும் நடவடிக்கையே மக்கள்மயப்படுத்தலாகும். தனியார்மயப்படுத்தலின்போது எழுகின்ற எதிர்ப்புக்களைச் சமாளிப்பதற்கான ஒரு தந்திரமான சொற்பதமே மக்கள்மயப்படுத்தலாகும். குரைக்கின்ற நாய்களுக்கு வீசி எறியப்படும் ரொட்டித் துண்டுகள் போன்றதே, தனியார்மயமாக்கலின்போது மக்களுக்கும் ஊழியர்களுக்கும் விற்பனை செய்யப்படும் பங்குகளாகும்.

## தொழிற்சங்கங்களின் போர்ப் பிரகடனம்!

இந்த அரசாங்கம் பதவி ஏற்றதிலிருந்து இதுவரை, சுகாதார சேவைகள் பகுதியில் மட்டும் வைத்தியர்களின் வேலைநிறுத்தம் உட்பட 24 வேலைநிறுத்தங்கள் இடம்பெற்றுள்ளன என, ஐலண்ட் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

இதுதவிர, தோட்டத் தொழிலாளரின் பாரிய வேலைநிறுத்தம் ஒன்றும் அரசாங்கத்திற்கு எதிராக நடந்துள்ளது. அத்துடன், அண்மையில் கொழும்பை இருட்டாக்கிய இலங்கை மின்சார சபை ஊழியரின் வேலைநிறுத்தமும் அரசாங்கத்திற்கு எதிராக நடாத்தப்பட்டுள்ளது.

இதில் முக்கியமான அம்சம் யாதெனில், இந்த வேலைநிறுத்தங்களில் ஒன்றுகூட, தொழிலாளர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றி வைக்கப்பட்டுச் சுமுகமாக முடித்துவைக்கப்படவில்லை. தொழிலாளரை மிரட்டிப் போராட்டங்களைக் கைவிடச்செய்ததும் அல்லது அரசாங்கத்தால் கருத்தில் எடுக்கப்படாது போராட்டங்கள் தோல்வியில் முடிந்ததுமான கதைகளே உண்டு.

இதனுடைய அர்த்தம், அந்த வேலைநிறுத்தப் போராட்டங்கள் எந்தநேரத்திலும் மீண்டும் வெடிக்கலாம் என்பதேயாகும். இதனை உண்மை என நிரூபிக்கும் வகையில், தாதியர் சங்கம் ஒரு பகிரங்க அறிக்கையை விடுத்துமுள்ளது.

## செய்தி ஆய்வு

யூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் தமது கோரிக்கைகள் தீர்த்துவைக்கப்படாவிட்டால் மீண்டும் வேலைநிறுத்தப் போராட்டத்தைத் தொடங்கப்போவதாக, தாதியர் சங்கம் அரசாங்கத்தை எச்சரித்துள்ளது. இதுபோல, மற்றைய தொழிற்சங்கங்களும் போராட்டங்களை மீண்டும் நடாத்த வாய்ப்புக்கள் நிறைய உண்டு.

இத்தகைய தொடரான வேலைநிறுத்தப் போராட்டங்களால் அரசிற்கு நிச்சயம் கணிசமான அளவு பொருளாதார நஷ்டம் ஏற்படும் என்பதை மறுப்பதற்கில்லை. மின்சார சபை ஊழியரின் வேலைநிறுத்தத்தால் அரசுக்கு 300 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன; தோட்டத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தமும் அவ்வாறானதே.

இந்தப் பொருளாதார நஷ்டங்களுக்கு அப்பால் - இத்தகைய வேலைநிறுத்தப் போராட்டங்கள் காரணமாக - வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சிறீலங்காத் தொழிலாளர்கள்மீது ஏற்பட்டுள்ள அவநம்பிக்கை, சிங்கள அரசுக்குப் பாரிய நஷ்டத்தைக் கொடுக்கக்கூடியது.

அரசியல் உறுதிப்பாடு, .தொழிலாளர் ஒத்துழைப்பு என்பன வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எதிர்பார்க்கும் முக்கிய இரு விடயங்களாகும். போரின் தாக்கங்கள் கொழும்பை எட்டுவதால் தோன்றும் பதற்றம், பாதுகாப்பின்மை போன்றவை வெளிநாட்டு முதலீட்டாளர்களை அச்சமடையச்செய்துள்ள இந்த நிலையில், அடுத்தடுத்து நடைபெறும் தொழிலாளர் கிளர்ச்சிகளும் அதை அடக்க அரசாங்கம் எடுக்கும் கடுமையான எதிர் நடவடிக்கைகளும், கொழும்பின் அரசியல் உறுதிப்பாட்டை நாளடைவில் பெரிதும் சீர்குலைக்கும்.

பதவிக்கு வருமுன்னர் பொதுஜன ஐக்கிய முன்னணி மக்களுக்குவழங்கியதேர்தல்வாக்குறுதிகளில் ஒன்றைத்தானும் சந்திரிகா அரசாங்கம் நிறைவேற்றவில்லை என்பது, கொழும்புப் பத்திரிகைகள் பலவற்றின் குற்றச்சாட்டு இதை அம்பலப்படுத்துமுகமாகக் கேலிச்சித்திரங்களை, சண்டே லீடர் பத்திரிகை தொடர்ச்சியாக வெளியிட்டுவருகின்றது.

பொ. ஐ. முன்னணி ஆட்சியைப் பிடிப்பதற்கு உதவிய சக்திகளில் முக்கியமானவை சிங்கள தேசத்துப் பத்திரிகை உலகமும் தொழிற்சங்க பீடங்களும் என்றால், அது மிகையாகாது. முன்னைய ஐ. தே. கட்சி ஆட்சியாளர்களால் அடக்கிவைக்கப்பட்டிருந்த இந்த இரு பகுதியினரும பொ. ஐ. முன்னணியை ஆதரித்ததில், வியப்பொன்றும் இல்லை.

ஆனால், இன்று இந்த இருபகுதியினரும் பொ. ஐ. முன்னணி அரசாங்கத்தால் பல்வேறு இடர்களைச் சந்தித்துவருகின்றனர்.

வடக்குக் கிழக்கின் போரை ஒருமுனையிலும், பத்திரிகை உலகம் மற்றும் தொழிற்சங்கங்களின் எதிர்ப்பை மறுமுனையிலும், சந்திரிகா அரசாங்கம் சந்தித்துள்ளது. குடாநாட்டில் அரசுப் படைகள் பெற்ற தற்காலிக இராணுவ வெற்றிகளைக் கையில்வைத்துக்கொண்டபடி, தென்னிலங்கையில் இருந்து வரும அரசியல் எதிர்ப்புக்களை முறியடிக்கச் சந்திரிகா அம்மையார் முயற்சிக்கின்றார். பொ. ஐ. முன்னணி அரசாங்கத்தின் இந்தச் சர்வாதிகாரப்போக்கை, எதிர்க்கட்சி இப்போது நன்றாகவே பயன்படுத்தத் தொடங்கியுள்ளது. அம்மையாரின் எதேச்சாதிகாரப் போக்கால், முன்னணிக்குள்ளும் கருத்துமோதல்கள் அதிகரித்துவருகின்றன. இவை எல்லாம் ஒன்றுசேர்ந்து அம்மையாரின் அரசாங்கத்திற்கு ஒரு அரசியல் நெருக்கடியைக் கொடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை! O

## அழித்தவர்கள் ஆக்கப் போகின்றார்கள்!

தமிழர் தாயகத்தினை மயானபூமியாக மாற்றியவர்கள் இன்று, அதனைச் சொர்க்க பூமியாக மாற்றப்போவதாக அறிவித்துள்ளனர். இதற்கு தமிழ் மக்களின் உதவியையும் ஆலோசனைகளையும் சந்திரிகா கேட்டுள்ளார்; இதற்கென ஒரு குழு அமைக்கப்படும் எனவும், இதற்கு ஒரு தமிழரே தலைவராக நியமிக்கப்படுவார் எனவும் ஆசைவார்த்தை கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளோடு பேச்சுவார்த்தை நடாத்திக்கொண்டிருந்த காலகட்டத்தில், வடக்குக் கிழக்கு மாகாண புனரமைப்புக்கு என ஒரு குழு உருவாக்கப்பட்டது. ஆனால் அப்போது, நிமால் சிறிபால டி. சில்வா என்ற சிங்கள அமைச்சரையே அக்குழுவிற்குத் தலைவராக சந்திரிகா நியமித்தார். மேலும், பேச்சுவார்த்தையின்போது விடுதலைப் புலிகள், இப் புனரமைப்பு வேலைகளையே மேற்கொள்ளவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தனர். ஆனால், சந்திரிகா அதனை மறுத்து, முதலில் இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பற்றிப் பேசுவோம்; அதன் பின்புதான் மக்களின் புனரமைப்பு - புனர்வாழ்வு பற்றிப் பேசுவோம் என்றார். இன்று இனப்பிரச்சினைக்கான தீர்வு காணாமல் போய்விட்டது; புனரமைப்பு முன்னுக்கு வந்துள்ளது. இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. பாதுகாப்புச் செலவு அரசின் கட்டுப்பாட்டினை மீறி வானளாவ உயர்ந்து செல்கிறது. 1996 ஆம் ஆண்டின் பாதுகாப்புச் செலவு இலக்கு 3800 கோடி ரூபா. ஆனால், இப்போது அது 4600 கோடி ரூபாவாக உயரும் என, பிரதி நிதியமைச்சர் ஜி. எல். பீரிஸ் கூறியுள்ளார். தனியார்மயமாக்கலின் பின்னடைவினால், அதன்மூலம், கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட 2100 கோடி ரூபாவும் கிடைக்காது போல் தெரிகின்றது. மின்தடை, வரட்சி என்பன உற்பத்தியில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளன. உல்லாசப் பிரயாணத் துறையின் வீழ்ச்சி, வெளிநாட்டு முதலீடுகளின் வீழ்ச்சி என்பன நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளன. பாதுகாப்புச் செலவினை எவ்வாறு ஈடுசெய்வது என்பது இன்று அரசின் மிகப்பெரிய தலையிடி. இதற்கான ஒரு தீர்வே யாழ்ப்பாணம் அமைதி நகரம் என்ற பிரகடனம். இதன்மூலம் வெளிநாட்டு உதவிகளைப் புனரமைப்புக்கெனப் பெறலாம் என்று அரசு கருதுகின்றது. ஆனால், தாம் கொடுக்கும் உதவிகள் யாழ்நகரின் புனரமைப்புக்கு வழிவகுக்காது; மாறாக, அப்பணம் யுத்தத்திற்குச் செலவிடப்பட்டு, கொஞ்சநஞ்சமாவது எஞ்சியிருக்கும் யாழ்ப்பாண நகரத்தின் முழுமையான அழிவிற்கே அது வழிவகுக்கும் என, வெளிநாடுகள் உணர்ந்துவிட்டன; எனவே, உதவி வழங்கவும் மறுத்துவிட்டன! O

## சந்திரிகா அரசாங்கத்திற்கு உலக வங்கி ஆலோசனை

2000 ஆம் ஆண்டில் சிறீலங்கா: செயல்முறைக்கான நிகழ்ச்சித் திட்டம் என்ற தலைப்பில், ஒரு பொருளியல் ஆய்வை உலக வங்கி நடாத்தி உள்ளது. சிங்களப் பொருளியல் ஆய்வாளர் சிலருடன், உலக வங்கியின் பொருளியல் நிபுணர்கள் சிலரும் இணைந்து இந்த ஆய்வைச் செய்துள்ளனர்.

சிறீலங்காவின் அரசுப் பொருளாதாரத்தை படுகுழியில் இருந்து மீட்க உதவுவதுதான் இந்த ஆய்வின் நோக்கம் என, உலக வங்கி கூறியுள்ளது. இந்த ஆய்வு முடிவுகள், நலிந்துபோயுள்ள அரசுப் பொருளாதாரத்திற்கு 'குளுக்கோஸ்' ஏற்றும் என்று உலக வங்கி தெரிவித்தாலுங்கூட, அது சிங்கள மக்களிடமிருந்து பாரிய எதிர்ப்பைச் சந்திக்கப்போகின்றது என்ற யதார்த்தத்தையும் எல்லாரும் உணர்ந்தே உள்ளனர்.

இலவச வழங்கல்களையும் மானிய உதவிகளையும் உடனடியாக நிறுத்தவேண்டும் என்பது, அந்த ஆய்வு முடிவின் ஒரு அம்சம்; அடுத்தது, அரசு நிறுவனங்கள் அனைத்தையும் தனியார்மயமாக்கிவிடவேண்டும் என்பது. இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி என்பனவும் தனியார்மயமாக்கப்படவேண்டும்'' என்று உலக வங்கி ஆலோசனை கூறியுள்ளது.

உலக வங்கியின் இந்த ஆலோசனைக்கு சந்திரிகா அம்மையார் உடனடியாகவே பதில் கூறவேண்டிய அளவுக்கு, சிங்கள தேசத்தில் அது பரபரப்பை ஏற்படுத்திவிட்டது.

உலக வங்கி கூறுவதுபோல மேற்குறித்த வங்கிகள் தனியார்மயப்படுத்தப்பட மாட்டாது என, அம்மையார் அறிவிப்புச் செய்துள்ளார்.

இதன் அர்த்தம், உலக வங்கியின் ஆலோசனைப்படி ஏனையவை தனியார்மயப்படுத்தப்படும் என்பது அல்லவா! தனியார்மயப்படுத்தப்படவேண்டும் என்று உலக வங்கி ஆலோசனை கூறியவற்றுள் தொலைத்தொடர்பு சம்பந்தப்பட்டவை, மின்சாரத்துறை சம்பந்தப்பட்டவை, உயர்கல்வி மற்றும் சுகாதாரம் சம்பந்தப்பட்டவையும் அடங்குகின்றன.

''இலவச விநியோகங்களை நிறுத்தவேண்டும்'' என்று உலக வங்கி கூறும்போது, ''பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகளை உடனடியாக நிறுத்தவேண்டும்'' என்று சுட்டிக்காட்டியுள்ளது. ''மானிய உதவிகளை நிறுத்தவேண்டும்'' என்று அது கூறும்போது, ''கோதுமை மாவிற்கான மானியக் கொடுப்பனவையும், உரத்திற்கான மானியக் கொடுப்பனவையும் கைவிடவேண்டும்'' என, ஆலோசனை கூறியுள்ளது.

உலக வங்கியின் ஆலோசனைகளை உடனடியாக நிறைவேற்ற, அரசு முயற்சிக்க மாட்டாது. ஏனெனில், அது மாபெரும் அரசியல் குழப்பத்தை சிறீலங்காவில் ஏற்படுத்திவிடும். ஆனால் மிக விரைவாக இதை அமுல்படுத்தும்படி, அரசை உலக வங்கி நிர்ப்பந்திக்க இடமுண்டு.

உலக வங்கியின் ஆலோசனைகளுக்குச் செவிமடுக்காதுவிட்டால், உதவி வழங்கலில் அது, சில கட்டுப்பாடுகளை சிங்கள அரசுமீது சுமத்தும். பாரிய பொருளாதாரச் சிக்கலைச் சந்தித்துள்ள சந்திரிகா அரசாங்கத்திற்கு, அவை பெரிய தலையிடியைக் கொடுக்கப்போகின்றன. அதே வேளை, உலக வங்கியின் ஆலோசனையை ஏற்றுச் செயற்பட்டால், அம்மையாரின் அரசு கவிழ்ந்தாலும் கவிழலாம்.

இதனுடைய அர்த்தம், சந்திரிகா அரசாங்கத்திற்கு முடிவுகாலம் நெருங்கிவிட்டது என்பது அல்ல -

முடிவின் ஆரம்பம் தொடங்கியுள்ளது என்று கூறலாம்! O

## நுணுக்குக்காட்டி

''...இனப்பிரச்சினைத் தீர்வில் இலங்கை அரசாங்கங்கள் மிக மிகத் தாமதமாகவும் மிக மிகக் குறைவாகவுமே கொடுக்க முன்வந்துள்ளன. இந் நகல் திட்டமும் அவ்வாறே. உதாரணமாக, ஜனவரியில் வெளியிட்ட நகல் திட்டத்தில் ஒகஸ்ட் யோசனைகளைவிட குறைவாகவே காணப்படுகிறது. இதற்குக் காரணம் அதிகாரப் பகிர்வுக்கு எதிரானவர்களின் கை ஓங்கியிருப்பதாகவே கொள்ளமுடியும்.

... இது எல்லாவற்றிற்கும் மேலாக, தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய எந்தவொரு அமைப்புடனும் பேச்சுவார்த்தை நடத்தாமல் தான்தோன்றித்தனமாக இதனைக் கொண்டுவந்துள்ளது. இதை நான் தருகிறேன்; ஏற்றுக்கொள் என்ற மமதைப் போக்குடனேயே இது முன்வைக்கப்பட்டுள்ளது.''

- ரொகான் எதிரிசிங்க
'சரிநிகர்' - மே 30 - ஜூன் 12, 1996.

''அவ்வப்போது ஆட்சியில் இருந்த அரசுகள் அவ்வப்போது இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காக நடத்திய அரசியல் கட்சி மாநாடுகள், வட்டமேசை மாநாடுகள், சர்வகட்சி மாநாடுகள், பாராளுமன்ற தெரிவுக்குழுக் கூட்டங்கள், 'சுத்துமாத்துக்கள்', தமது ஆட்சி அதிகாரங்களை தொடர்ந்து காப்பாற்றிக்கொள்வதற்காக ஆடிய கபட நாடகங்களாகவே அமைந்தன. இது இந்நாட்டின் வரலாற்று உண்மையாகும்.''

- ஏ. சாந்தகுமார்
'வீரகேசரி' - 15. 05. 1996

''யாழில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பொலிசுக்கு இப்பொழுது 3,000 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என, மே 15 'தினமின' பத்திரிகை தலைப்புச்செய்தி வெளியிட்டது. இம்முறைப்பாடுகளுக்குள் அசாதாரண செயல்கள், பாலியல் வல்லுறவு, பிள்ளைகள் கடத்தப்படுதல், வீடுகள் சேதமாக்கப்படல் மற்றும் வெவ்வேறு முறையிலான பழிவாங்கல்களும் அடங்கும்.''

- சென்றவாரக் குவிமையம் பத்தியில்.
'சரிநிகர்' - மே 30 - ஜூன் 12, 1996.

''— 'சூரியப்பிரகாசம் - ஒன்று' இராணுவ நடவடிக்கையின்போது அறுபது லட்சம் ரவைகளும், சாதாரண, ஆட்லறி, தாங்கி எறிகணைகள் உட்பட 87,000 எறிகணைகளும் பாவிக்கப்பட்டுள்ளன.''

- வருண கருணதிலக
'கவுண்ட பொயின்ற்' இதழில்.

# பண்டா குடும்பம் போல் உண்டா உலகில்?

சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் சிறீமாவோ ரத்வத்த பண்டாரநாயக்காவின் நீண்ட அரசியல் வாழ்வினைப் பெருமைப்படுத்தும் முகமாக, சிறிய விவரணத் திரைப்படமொன்று வெளியிட்டு வைக்கப்பட்டது. அம்மையாரினதும் அவரது பிள்ளைகளினதும் கூற்றுக்களாக - மலரும் நினைவுகளாக-அமையும் இத்திரைப்படம், பல உணர்வலைகளைக் கிளப்புகின்றது. 'தென்னாசியாவிலே பண்டா குடும்பம் போல் உண்டா' எனப் பெருமையடித்துக்கொள்கிறது, ரத்வத்த குடும்பத்துச் செய்தி ஏடான ஐலண்ட். இந்தியாவின் நேருக்கள், பாகிஸ்தானின் பூட்டோக்கள், பங்களாதேசத்தின் ரகுமான்கள் - இவர்கள் எல்லாருக்கும் இல்லாத பெருமையாக, ஒரே குடும்பத்திலே இரண்டு பிரதமர், ஒரு சனாதிபதி, உயர் அரசியல் பதவிக்கு தயாராகும் இன்னொருவர் என்பனவே, இப்பெருமைக்குக் காரணங்களாக கற்பிக்கப்படுகின்றன. அதே வேளை, அரசியல் எமது குடும்பத் தொழில்; அதில் ஈடுபட்டதால் நாம் ஒட்டாண்டியானதுதான் மிச்சம்; அதில் வாரிக் கொட்டியதே அதிகம்; பதிலாக, பெற்றதோ மிகக் குறைவு எனவும் திரைப்படத்தில் கூறப்படுகிறதாம். இவையெல்லாம் உண்மைதானா என நாம் அறியப்புகுந்த வேளை, தந்தை, தாய், மகள் என விரியும் பண்டா குடும்ப ஆட்சியிலே உள்ள - விசித்திரமான ஆனால் ஆபத்தான-ஒற்றுமைகள் சில வெளிப்பட்டன. தொடக்கமும் இடையும் முடிவும் ஒன்றாகும் ஒற்றுமைத் தன்மைகள் இவை!

தொடக்கம் எவ்வாறிருந்தது? மே 1956 ஆம் ஆண்டுத் தேர்தலில் பண்டாவும், மே 1970 இல் சிறீமாவோவும், அண்மையில் சந்திரிகா அம்மையாரும் குறிப்பிடத்தக்க வெற்றிகளை அடைந்தமைக்கு, அவ்வக் காலகட்டங்கட்கு முன் பதவியிலிருந்த ஐ.தே.கட்சியினரின், மிக மோசமான மக்கள் விரோத செயற்பாடுகளே காரணமாகின. 1952ஆம் ஆண்டு மேயில் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற டட்லியும், தொடக்கத்தில் அவரது நிதிமந்திரியாய் இருந்த ஜே.ஆரும், 1953 ஓகஸ்டில், அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு அரசு வழங்கிய மானியத்தை வெட்ட - ஒரு கொத்து அரிசியை 25 சதத்திலிருந்து 70 சதமாக்க, சீனி விலையை இரட்டிப்பாக்க, பாடசாலை மதிய உணவை வெட்ட, போக்குவரத்து, தபாற் கட்டணங்களை இரட்டிப்பாக்க - 1953ஆம் ஆண்டு ஓகஸ்டில் பெரும் வேலைநிறுத்தம் வெடித்தது. எனவே, நிலைமைகளை சரியாகக் கணக்கிட்டு ஏற்கெனவே தனிக்கட்சி ஆரம்பித்த பண்டா என்ன செய்தார்? சிங்கள பொதுமகன் யுகத்தை, சிங்களத்தின் சிறப்பை, பௌத்தத்தின் மேன்மையை உச்சியில் வைத்துக் கொண்டாடப் போவதாகக் கூக்குரலிட்டார். 24 மணித்தியாலத்திற்குள் சிங்களம் ஆட்சி மொழியாகும் என்றபண்டா, இன்னொரு உத்தியையும் பின்பற்றினார். அதுதான் கூட்டணி அமைக்கும் வித்தை. 'மகஜன எக்சத் பெரமுன' எனப்படும் 'மக்கள் ஐக்கிய முன்னணி'யையும்(எம். ஈ. பி.), அப்போது இடதுசாரிகளின் தந்தையாக இருந்து பின் வலதுசாரியாகப் பரிமாணம் பெற்ற பிலிப் குணவர்த்தனாவின் வி. எல். எஸ். எஸ்.பி. கட்சியையும், டபிள்யு. தகநாயக்காவின் 'சிங்கள பாசா பெரமுன'வையும் இணைத்து கூட்டணி உருவாக்கினார். எனவே, இதன் அறுவடையாக 1956 மேயில், 39.5 விழுக்காடு வாக்குகள் பெற்று, 95தொகுதிகளில் 51ஐ வென்று ஆட்சியைப் பிடித்தார் பண்டா. அப்போது ஐ.தே.கட்சி பெற்றது 8 இடங்கள் மட்டுமே.

1970 களிலும் இக்கதையின் மறுபதிப்பு. 1965 — 1970 ஐ.தே.கட்சி ஆட்சியில் நாடே நலிவுற்றது. முதலாளிகள் கொழுத்தனர்; ஏழைகள் இளைத்தனர். 1952 ஆம் ஆண்டு 100ஆகக் கணிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுச் சுட்டெண், 1970 இல் 122 ஆகியது. கிராமப்புறங்களிலே உயர்கல்வி கற்று வேலையற்ற வாலிபர் தெருவில் திரிந்தனர். வேலைப்படையில் 14 விழுக்காட்டினர் வேலையற்றவராயினர். 65 விழுக்காடு மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்ந்தனர். எனவே, அரசியல் குடும்பத் தொழிலாகிவிட்ட நிலையில், பேட்டுக் குடிச் சாயம் களைந்து - சோசலிச முகமூடி அணிந்து, மக்கள் தலைவி ஆகி, கணவர் காட்டிய வழியில் இன்னொரு கூட்டணி அமைத்தார் சிறீமாவோ அம்மையார். எல்.எஸ். எஸ். பி., சி.பி. இணைந்த கூட்டணிக்கு இப்போதைய பெயர் ஐக்கிய முன்னணி. ஐக்கிய முன்னணியின் வாக்குறுதிகளை நம்பி, ஜே. வி. பி. அமைப்பின் உறுப்பினர் அதன் வெற்றிக்கு மாடாக உழைத்தனர்; மக்களும் மயங்கினர். 1970 மேயில் 90 இடங்களைப் பெற்று சிறீமா பெருவெற்றி அடைய, ஐ. தே கட்சி பெற்றது 17 இடங்கள் மட்டுமே.

இனி மகளின் கதை. தந்தையைப் போல் தாய்; தாயைப் போல் மகள். 17 வருட ஐ. தே. கட்சியின் ஆட்சியை இரண்டேயிரண்டு சொற்களில் - தூசணய, பீசணய என - அதாவது உச்ச ஊழல், தாங்கமுடியா அடக்குமுறை என வருணித்து, ''தந்தையை-கணவனை இழந்த, இரு பிள்ளைகட்கான விதவைப் பெண்!'', ''உங்களில் ஒருத்தி'' என தன்னை உருவகித்து, போருக்குச் செலவிடும் 2500 கோடியை மிச்சம் பிடித்து அற்புதங்கள் நிகழ்த்தப் போவதாகக் கூறிய சந்திரிகா அம்மையார், தந்தை, தாயைவிட ஒருபடி மேலேபோய் ஏழு கட்சிக் கூட்டணியை உருவாக்கி, அக் கூட்டணிக்கு சவர்ச்சிகரமாக பொதுஜன ஐக்கிய முன்னணி எனப் பெயரிட்டார். பதவியைப் பிடித்த கதை எல்லாருக்கும் தெரிந்த கதை!

இதுவரை பண்டா குடும்பம் பதவிக்கு வந்த சுருக்கக் கதை சொல்லப்பட்டது. இனி - பதவிக்கு வந்தபின் நடந்த கதை; அதுவும் ஒரேமாதிரியான கதைதான். கூட்டணிகள் முறிந்த கதையும், வாக்குறுதிகள் மீறப்பட்டதால் வந்த வினையும், இவை எல்லாவற்றிற்கும் நிழல் திரை போட - திசை திருப்ப - தமிழன் தலையில் மிளகாய் அரைக்கப்பட்ட பெருங் கொடுமையும் பண்டா குடும்பச் சொத்துக்களாக, என்றும் வரலாற்றில் நிலைத்து நிற்கும. இவ்வாற கூட்டணி அமைக்கும் தொழிலைத் தொடக்கிய பண்டா 1956 ஆம் ஆண்டு, பிலிப்பை கைத்தொழில் அமைச்சராக்கினார். தொடக்கத்தில் முற்போக்கான தோற்றத்தைக் காட்டிய பண்டாவை நம்பி, நிலச்சீர்திருத்தச் சட்டமொன்றைக் கொண்டுவர பிலிப் முயன்றபோது, பண்டாவின் அமைச்சரவையின் படுபிற்போக்குத் தன்மை வெளிப்பட்டது. அமைச்சர்கள் பலர் எதிர்ப்புக் காடடவே, இறுதியில் பிலிப், 1959 மேயில் பதவி பறிக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து இடதுசாரிகள், நாட்டில் பெரும் வேலைநிறுத்தங்களை நடத்தி - கைத்தொழில், துறைமுக, பொருண்மியத் துறைகளை நிலைகுலையச் செய்த கதை நீண்ட கதை. புத்தரகித்த தேரரை முன்னிறுத்தி 'எக்சத் பிக்கு பெரமுன'வை உருவாக்கி, இப் பிக்குகள் முன்னணியின் பத்து அம்சக் கோரிக்கையை ஏற்று பதவிக்கு வந்த பண்டா, செல்வநாயகத்தோடு பேசத் தொடங்கவே, பேரினவாதிகள் வெகுண்டனர். 1958 ஆம் ஆண்டு ஏப்ரில் 9 ஆம் திகதி, பண்டாவின் சுகாதார அமைச்சர் திருமதி விமலா விஜயவர்த்தனா தலைமையில் புத்தரகித்த தேரரின் பிக்குகள் அணி, பண்டாவின் வீட்டு வாசலில் மறியல் செய்யவே, செல்வாவோடு தான் செய்த உடன்பாட்டைக் கிழித்து, பிக்குகள் முன்னிலையில் பண்டா வீசினார். இதற்கிடையில், தமிழருக்குத் ''தகுந்த பாடம்'' படிப்பிக்க 1956, 1958 இன அழிப்புக் கலகங்களை நடத்திமுடித்தார். இவ்வாறாக பண்டா ஏறுக்குமாறாக நடந்து, எவருக்காயினும் கொடுத்த வாக்குறுதிகளை காற்றில் பறக்கவிட்டு, 'பண்டா குடும்ப அரசியல் முன்மாதிரி' ஒன்றை முதிசமாக விட்டுச் சென்றார்.

வே. பாலகுமாரன்

எனவே. அம்மையார் சிறீமாவோவும் 1970 களில், எல். எஸ் எஸ்.பி. கட்சியின் என். எம். பெரேராவுக்கு நிதி அமைச்சர் பதவி வழங்கி, அத்தோடு கொல்வின், லெஸ்லி போன்றோருக்கு மட்டுமல்ல சி. பி. இன் பீற்றர் கெனமனுக்கும்கூட வீடமைப்பு அமைச்சை வழங்கி, தொடக்கத்தில் ஆதரித்தார். ஆனால், அம்மையாரின சாயமும் விரைவிலேயே வெளுத்தது. அதன் பயன் வெகு விபரீதம் ஆகியது. ஒடுக்கப்பட்ட - வறுமையில் வாழ்ந்த - கரவா, துறாவ, வகுகும் புற, பத்கம இளைஞர்கள் தமது வாழ்நிலையில் எந்த மாற்றமும் கொண்டு வரப்படாத நிலையில், 1971 ஏப்ரில் கிளர்ச்சியை மேற்கொள்ள, 15 - 20 ஆயிரம் சிங்கள இளைஞர்களைக் கொன்று குவித்து, ரத்வத்த குடும்ப மேலாண்மையை அம்மையார் நிலைநாட்டினார். அடுத்து, தமிழர் பக்கம் கவனத்தைத் திருப்பிய அம்மையார் செய்த கொடுமைகள் எண்ணிலடங்கா. 1972 புதிய யாப்பிலிருந்து, தமிழர் மத்தியிலே துரோகிகளை உருவாக்கியதிலிருந்து, தரப்படுத்தலிலிருந்து, தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளிலிருந்து, தந்தை செல்வாவையே தமிழீழக் கொள்கையை முன்வைக்கச் செய்து, ஈற்றில் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தையே முகிழ்க்கச் செய்தார். இந்நிலையில், 7 வருட ஆட்சியில் நாடே திறந்த சிறைச்சாலையாக, பஞ்சம் பட்டினி நிலவ, இடதுசாரிகளில் பழியைப் போட்டு என். எம் பெரேராவை பலிக்கடாவாக்கி, 1975 செப்ரெம்பரில் அவரையும் அவரது கட்சியையும் தூக்கி வெளியில் போட்டார் அம்மையார். இறுதியில் வேறு வழியில்லாமல்-வேண்டா வெறுப்பாக - சி பியும் 1977 தொடக்கத்தில் வெளியேறியது. எனவே இப்போது சந்திரிகா அம்மையார், பண்டா குடும்ப வித்தைகள் யாவற்றையும் சித்து விளையாட்டாக்கி பதவிக்கு வந்தபின், கொடுத்த வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டு, தமிழர் வாழ்வைப் பறித்தெடுத்து இறுதியில் சிங்களவரையே காரிருளில் தள்ளிவிட்ட நிலையில், எல். எஸ். எஸ். பியும், டி. யு. என். எஃவ். கட்சியும் முரண்படும் நிலையில், நாம் கூற என்ன உள்ளது?-வரலாறு திரும்பத் திரும்ப ஒரேவிதமாகவே நிகழ்கிறது என்பதைத் தவிர.

இப்போது இறுதியாக தண்டனைக் காலகட்டம். 1959 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 29 ஆம் திகதி காலையில், அலரி மாளிகைக்குள் பிரவேசித்த சோமராம தேரர், முன் விறாந்தையில் தன்னைக் கண்டு வணங்கிய பண்டா மீது, தனது அங்கிக்குள் இருந்த கைத்துப்பாக்கியை எடுத்து நேரே சுட்டார்! மருத்துவமனைக்குப் போகமுன்னரே பண்டாவின் உயிர் போய்விட்டது. பின் நடைபெற்ற நீதிமன்ற விசாரணையிலே பல திடுக்கிடும் உண்மைகள் வெளியாகின. களனி ரஜ மகா விகாரை அதிபதியான புத்தரகித்த தேரர் மறைமுகமாக வணிக - கைத்தொழில்முயற்சிகளில்ஈடுபட்டதும், துறைமுகம் தொடர்பான ஒப்பந்தமொன்றைத் தான் விரும்பியவர்க்கு பண்டா கொடுக்க மறுத்ததால் அவரைப் பழிவாங்கத் திட்டமிட்டதும், அதற்கு விமலா விஜயவர்த்தனா துணைபோனதும், கொலை ஒரு உள்வீட்டு வேலை என்பதை விளக்கின. அடுத்து, சிறீமாவுக்கான தண்டனை. 1977 தேர்தலில், குள்ள நரி 'டிக்கி யக்கி' ஜே. ஆர். தர்மிஷ்டராக வேடம் போட்டு 139 இடங்களைப் பெற, அம்மையார் எட்டு இடங்களையே பெற்றார். அன்றுதொட்டு இன்று வரை, அரசியல் பாலைவனத்தில் திக்குத் திசை தெரியாமல் அம்மையார் அலைவதும், மகள்கூட தாயை வெறும் இறப்பர் முத்திரையாக பயன்படுத்துவதும் தெரிந்த கதை.

இப்போது பண்டாவின் குடும்பத் தொழிலில் கொடிகட்டிப் பறக்கும் சந்திரிகா அம்மையாருக்கு வரலாறு வழங்கப்போகும தண்டனை எவ்விதம் இருக்குமென்பது எமக்குத் தெரியாவிட்டாலும், உச்சத் தண்டனையாக அது அமையும் என்பதற்கான அறிகுறிகள், இப்போது மிகத் தெளிவாகத் தெரிகின்றன. 2000 ஆண்டுக்குள் அம்மையார் என்ன செய்யவேண்டுமென உலக வங்கி சட்டம் போட்டுவிட்டது. இலங்கை வங்கி - மக்கள் வங்கி உள்ளிட்ட வங்கித்துறை, மின்வலு. தொலைத் தொடர்புத் துறை ஆகியன தனியார்மயமாக்கப்படுதல் வேண்டும்; கோதுமை மாவிற்கான மானியம் நிறுத்தப்பட வேண்டும்; உயர் கல்வி, சுகாதாரத் துறையில் செலவிடும் பணத்தை அறவிட வேண்டும்; பாடசாலைச் சீருடைகள் வழங்குவது நிறுத்தப்படல் வேண்டும்... இப்படியாக, அது வேண்டும், இது வேண்டும் என பல்லவி பாடும் உலக வங்கி இறுதியாய், ''சிறீலங்காவில் முதலிட தனியார் நம்பிக்கைகொள்வதாயின் அமைதியே அவசியம்'' என, முத்தாய்ப்பு வைக்கிறது.

('' In a nutshell peace is essential to sustain private confidence in Sri Lanka's investment prospects.'')

எனவே, இவ்வாறாக பாரிய சாதனைகள், தனித்தன்மைகள்கொண்ட '' புகழ் மிக்க குடும்பமாக!'' பண்டா குடும்பம் அமைகின்றதென்பதில் என்ன ஐயம்?! ○

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்